[illegible]

V5 No 6, 11 Feb 1932

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

16 FEB 19

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 5] 1932 ௵ பிப்ரவரி ௴ 11௳ [No. 6

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 101
2. அப்பர் (64 கலை—தர்க்கம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 103
3. குன்றுடையானும் மக்களும்
W.V. கோவிந்தசாமி ராஜு BA.,LT. 106
4. தமிழ்ப்பாடம்
நளவெண்பா—சுயம்வர காண்டம் 108
5. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 1. களம் 3.)
ஷேக்ஸ்பியர் நாடகம் 111
6. தினகர வெண்பா
S. வையாபுரிப்பிள்ளை B A. B.L. 114
7. கம்பராமாயணம் (சரபங்கர் பிறப்பு நீங்கு படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 115
8. பெண்பாலார்—(ஷாபன்ஹூர் கட்டுரை
மொழிபெயர்ப்பு) - K. இராஜகோபாலன் 117
9. மதிப்புரை—பாகவத விஞவிடை 119
10. வர்த்தமானம். 119

சந்தாத் தொகையை மணியார்டரில் அனுப்பிவைப்பதேநலம். அப்படிச்செய்யாத நண்பர்களுக்கு வி. பி. அனுப்பிவருகின்றோம். வி. பி. தம் கைக்கு எட்டியவுடன் அதனைப் பெற்றுக்கொள்ளத் தவறுவாராயின் எமக்கு மிகுந்த நஷ்டமாகும்.

தபால்கட்டணம் உயர்ந்திருப்பதால் மலேயே தென்னுப்பிரிக்கா முதலிய அயல் நாடுகளுக்கு இவ்வாண்டிலிருந்து சந்தா ரூ. 9-8-0 ஆக உயர்த்தப்பட்டிருக்கின்றது. அவ்விடங்களுக்கு வி. பி. அனுப்ப இயல்வதில்லையாதலின் அங்கிருக்கும் நண்பர்கள் விரைவில் தம் சந்தாத் தொகையை அனுப்பும்படி வேண்டுகின்றோம்.

மானேஜர்.

## கலாநிலயம்

### நெஞ்சத்து நல்லன் யான் 2.

மானுட மனத்தைப்போல் மாயமுடையது வேறொன்றுமில்லை. ஏனெனில், மனமானது தன்னையே தான்நேராகத்தெரிந்துகொள்ளமாட்டாமல்பற்பலநிலைகளில் திகைக்கக் காண்கிறோம். இறுதியில் எய்தவல்ல முடிவு ஒன்றே யாயினும், ஒரு விடயத்தின் காரியத்தைக் கருதுங்கால் ஒருவகை நினைவுகளும், அதே விடயத்தின் காரணத்தைக் கருதுங்கால் வேறுவகை நினைவுகளும் வந்தெழ நேர்வது இயற்கையே. இனி, காரணம் காரியம் என்னு மிவ்விரண்டையும் வேறு வேறு பிரிக்காமல், ஒரு விடயத்தை மேல்நோக்காகக் கொள்ளுமிடத்து அவ்விருவகை நினைவுகளும் விரவி வந்து நிகழும். அதுவுமன்றி, காரணகாரிய மென்னும் விடயத்தொடர்பின் நெறிமுறையில், ஒன்றே முன்சென்றதன் காரியமாகவும் பின் வருவதற்குக் காரணமாகவும் மாறிமாறி நடக்கவேண்டுவதும் இன்றியமையாததாகின்றது—(இதனை, முன், சுயநலச்சோதனை, 3-வது வால்யூம், 101-வது பக்கம், என்னுந் தலையங்கத்தில் விளக்கியிருக்கின்றோம்.)

ஆதலின், ஒன்று காரணமாய் நிற்கும்போது இன்ன காரியத்திற்கு இது காரணம் ஆதல்வேண்டும் என்று இயம்புவதும், அதுவே காரியமாயின் அக் காரியத்தின் தன்மை யாவதா யிருத்தல்வேண்டும் என்று இயம்புவதும் அந்தத்தில் ஒரு முடிவினுள் ஒற்றுமையடைவதைக் காணும்வரையில் தொடர்ந்து செல்லாமல், அவ்விருவுரைகளையும் தனித்தனி வைத்துப் பார்ப்பவர்களுக்கு அவைதாம் முரண்படப் பகர்வதுபோல் தோன்றும். அவ் வாறு ஐயமெய்திய நம் நண்பரொருவர் நமது சென்றவாரத் தலையங்கத்தைப் பற்றி எமக்கு வரைந்துள ஓர் கடிதத்தை இங்குத் தருகின்றோம். அக்கடிதம் வருவாறு:—

கடிதம்

"காதிற்கெட்டிய சொற்றொடர்களை எல்லாம் பற்றிக்கொண்டு வறிதே அலைகின்ற மாந்தருக்கு, இப்பூதலத்தில் எங்கெங்கும் "அன்புண்டு அழகுண்டு கடவுள் அருளும் உண்டு— அவைகளை அடைவதற்கு வழியுமுண்டு" எனப் பரிந்தழைத்து உய்விக்க வந்த

வொரு மருந்தனைய 'கலாநிலயத்' தலையங்கங்களைக் கடந்த நான்கு ஆண்டுகளாக நான் தொடர்ந்து படித்து வருகின்றேன். அலைந்து அவசமுற்றிருந்த என்மனதை ஒருநிலைக்குக் கொணர்கின்ற நலத்தினால் இக் கலாநிலயம் எனக்குச் செய்யும் உதவியோ மிகப் பெரியது. நான்பெற்றஇவ்வுறுதியை மற்றவர்களுக்கும்இனிதின் எய்துவித்து, மக்களைத் தெய்வத்திருவருளிற்கு ஆளாக்கிவைக்கும் முயற்சியில் கலாநிலயம் நெடிது நின்று ஓங்குவ தாகுக.—நிற்க, சென்றவாரத்துத் தலையங்கத்தில் தாங்கள் வரைந்துள சில மொழிகள் எனக்குப் பெரிய சந்தேகத்தை உண்டாக்குகின்றன. அதனைத் தெளிவிக்க வேண்டுகின்றேன். மன்னிப்பீர்களாக. அதனில்,

"......கொடைகளிற் பல வாய்க்கரிசி பல கைக்கூலி ; இன்னவைகளின் நோக்கத்தைப்பற்றிக் கொடுத்தோனுக்கேனும் வாங்கினவனுக்கேனும் யாதும் சந்தேகமில்லை. இவைகிடைக்கக் குறிப்பிட்டுக் காட்டக்கூடிய பிரதிப்பிரயோசனம் ஒன்றும் இல்லாதவிடத்தும் புரிந்த கொடைகளெல்லாம் கருணையாற்றானே நிகழ்ந்திருக்கவேண்டும் என்னும் நியதியில்லை. தற்பெருமைக்காக விருக்கலாம் ; ஈத்துவக்கும் இன்பத்திற்காக விருக்கலாம் ; புகழிற் கவாவியதாகவுமிருக்கலாம். இவை கருணையின், காரியங்களாகா..........ஒருவனுக்கு, ஒருஉதவிசெய்ததன்பின் தன் நெஞ்சத்து நல்லன் யான் என்னும் நினைவு எழுமாயின் கருணையால் இயங்கியது அவன் மனம் என்றுகொள்வோம்... ......இது செய்தேன், ஆதலின் 'நெஞ்சத்து நல்லன் யான்' என்று உடன்பாட்டுவகையில் தோன்றும் நினைவையே நாமிங்குக் கருணைக்கு அடையாளமாகக் காட்டுகின்றோம்........"

என்று கூறியுள்ளீர்கள். இவ்வாசகத்தின் கருத்து, நான் உட்கொண்டபடி, "ஒருவன் செய்கருமம் எதுவாயினும், செய்தவன் உள்ளத்தில் 'நல்லன் நான்' என்ற எண்ணத்தை அதுதான் கிளரிவைக்குமாயின், அக்கருமமும் நற்கருமம் என்பதும், அவன் மனமும் அருளும், அன்பும் பெருமையும் உடையது" என்பதும் கைவரப்பெறுகின்றது. இத்தலையங்கத்தைத் தனியே படிக்குங்கால் இதனில் மயங்குதற்கொன்றுமில்லை. ஆனால் இதே கலாநிலயத்தில் எழுதப்பெற்ற இக் கருத்துடன் சார்புடைய சில கட்டுரைகளை நோக்குங்கால் முரணொன்று விளையலாகின்றதே. 1930-வது ஆண்டு முடிவில் வந்துள, பெருமையின் பெருமையென்ற இரண்டு தலையங்கங்களால், 'நெஞ்சத்து நல்லன் யான்' என்னும் நினைவுடன் பயிலும் மனம் சிறப்புடையதென்று கொள்ளற்பால தன்றென வற்புறுத்தப் பெற்றிக்கின்றது. அக்கட்டுரையில்,

"......ஒரு தொழிலின் அல்லது ஒரு நிலையின் பெருமை எத்துணை உயர்ந்ததேனும், தன்னையே அறியாமல் அத்தொழிலைப் புரிபவரும் அந்நிலையில் நிற்பவரும் எய்திய பெருமையின் உயர்வினைத் தம் தொழிலையும் நிலையையும் தெரிந்து விவகரிப்பவர் எட்டமாட்டார். 'கற்பென்னுங் குணமுடையாள் தான்' என்று தெரிந்துகொண்டு ஒழுகுமொரு பெண்ணினும், அத்தன்மையை அறியாமலே அந்நிலை நிற்பாள் ஒருத்தி உயர்ந்தவள் அல்லளோ ?"

என்று 'நல்லது செய்கின்றேன்' என்னும் ஞாபகத்துடன் செய்யும் கருமமும், அவ்[illegible]லைக்கும் மனமும் பெருமையின் இலக்கணத்தின்பாற்படு[illegible]டது அன்று எனக் கா[illegible]ப்பெற்றுளது. இத்தகைய செய்தொழிலோ மனநிலையோ அத் தலையங்க உரையால் இழிக்கவே பெறுகின்றது. மேலும் பெருமையின் இலக்கணமாக அதே கட்டுரையில்,

"கடவுளிடத்தில் பக்தி தமக்குளதென்னும் உணர்வினோடு ஆராதனை புரிவாரும், மாந்தர்பால் அன்பும் அருளும் உளதென்னும் உணர்வினோடு நல்லறங்கள் ஆற்றுவாரும், இதுஇது என்னும்ஆராய்ச்சியும் அறிவும் இன்றியே ஆவினைக்கண்ட கன்றுபோல் கடவுளிடத்தும், கன்றினைக்கண்ட ஆவைப்போல் மக்களிடத்தும் பக்தியும்அன்பும்வாய்ந்த இயற்கைச் செவ்வியோர்க்கு இணையாகமாட்டார். தூய்மையும் தெய்வபக்தியும் எய்திச் சிறந்த பட்டினத்தடிகள்,

"வாளால் மகவரிந் தூட்டவல் லேனல்லேன்
மாதுசொன்ன
சூளா லிளமை துறக்கவல் லேனல்லேன்
தொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்லேன்
நானினிச்சென்
றாளாவ தெப்படி யோதிருக் காளத்தி
யப்பனுக்கே"

என நினைந்திரங்கி எங்கிய சிந்தையில் யாம் இங்கு விளக்கமுயல்கின்ற கருத்தினை நன்கு விளக்கிக் காட்டுகின்றார். காளத்தியப்பன்பால் தான் (பட்டினத்தடிகள்) செலுத்தும் பக்தி கருத்துடன் தொடர்ந்து செய்யப்படுகின்ற தாதலின் அது செயற்கைநிலையே என்றும், விளையாட்டுச் சிறுவனை அரிந்து விருந்திட்ட சிறுத்தொண்டனும், 'திருநீலகண்டம் என்னைத் தீண்டேல்' என்று தன் ஊடிய மனையாள் உரைத்த சூள் கடவாது தன் இளமையைக் கடந்த திருநீலகண்ட நாயனாரும், புண்ணுற்ற கண்ணிழந்து சிவபிரான் உழலாவண்ணம் தன்னிரு கண்களையும் விரைந்து உதவத் தலைப்பட்ட திண்ணனாரும் இயற்கைநிலை நின்ற மேன்மையோர் என்று பிரித்துக்காட்டும் வாய்மை மறக்கற்பாலதன்று. செயற்கைச் செய்தியினும் இயற்கைச் செவ்வி எக்காலும் சிறந்தது"

என்று ஊக்கமுடன் வகுத்த நீங்கள், சென்றவாரக் கட்டுரையில் அதனிற்கு ஓர் முரண் அமைத்து விட்டீர். நெஞ்சத்து நல்லன் நான் என்னும் நினைவுடைய கருமத்தினும் சீரியது நினைவொன்றுமில்லாத செயல் என்று தானே இதனாற் பெறப்படும் என்று ஒருவாறு நீங்கள் கூறிவிடலாம். அப்படிச் செய்வதால் எனது உள்ளத்திடை யெழுந்த ஐயம் தீர்ந்ததாகாது. சென்ற நான்கு ஆண்டுகளாக நீங்கள் வரைந்துள கட்டுரைகள் பலவற்றில், கோபம் கொண்டேனென் என்ற நினைவினில் கோபமுடைமை யின்மையும், நல்லன் யான் என்ற நினைவினில் நன்மை நிலையாமையும், கற்பின் நினைவினில் கற்பிலாமையும், விளையுமென்று காட்டியுளதோடு, சென்ற வாண்டு 'மறுப்பதும் உறுதியாமே' என்னும் தலையங்கங்களில், 'பக்தியுடையன் யானென்பான் நாத்திகனே' என்று வன்மையொடும் நிலைநிறுத்தி யிருக்கின்றீர்கள்.

இது ஒருபுற மிருக்க, இராமயணக்கட்டுரை வரைந்துவரும் சேஷாசலனார், கேகயன்மகள்தன் குறையை யகற்றமுயன்ற ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியாரைமறுத்தெழுதிய பலவிடயங்கள் 'செயற்கைச்செய்தியினும் இயற்கைச் செவ்வியே எக்காலும் சிறந்தது' என்று, தாங்கள் பெருமையின் பெருமை என்னும் கட்டுரையில் காட்டிய முடிவைச் சிதைக்கின்றன. அறிஞர் சேஷாசலனார் கூறுகின்றார்:—

188954
600 008



"......அறிவினாற் சோதித்துச் சோதித்து நிலைப் பொருள்கள் அனைத்தும் ஒன்றேயென்று தேர்ந்து இடையிடையே குறுக்கிடும் வேற்றுமை நினைவினை முதுகிடவென்று தனதென்றும் பிறரதென்றும் பிரிவுபடுத்திப் பாராட்டாமல், உள்ளத்தின் உதவிகொண்டு ஒழுகவேண்டியவர் ஒருசாரார். இயற்கையா யமைந்த உள்ளத்தின் தூய்மை கெடுதலின்றி வாழ்வதற்குரிய சாதனங்கள் வாய்த்திருப்பதால் ஒற்றுமை அறிவினை எய்துகின்ற ஆராய்ச்சிப் பயிற்சியின் உதவியின்றி உணர்வொன்றே உய்த்திட வேற்றுமை நினைவின்றி ஒழுகுவார் மற்றொருசாரார். முன்னினத்தைச் சேர்ந்தவள் கோசலை, பின்னினத்தவள் கைகேசி...'இராமன் நாளை முடிசூடுவான்' எனக்கேட்ட கைகேசி, 'பரதனுக் கில்லையே', என்ற வேற்றுமையொன்றும் பாராட்டாமல் மகிழ்ந்ததுபோல், 'பரதனே 'துங்கமா முடிசூடுவான்' எனக்கேட்ட கோசலை......'நும்பிக்கு நானிலம் கொடுத்து நீ ஒன்றி வாழுதி,' என்று இராமனை உவகையுடன் பணித்தாள். இவ்விருவரும் ஒரே நிலை வந்துற்றபோது ஒழுகிய முறையும் ஒன்றே...... ......புறத்தினின்று யாதும் எற்றுதல் இல்லாதவரை, கல்லாது நின்ற உள்ளத்துணர்வு தங்குகின்றதேனும், அன்னதற்கு ஆற்றரியஇடையூறு வந்தெய்தியதெனின் தலைநிற்கவியலாது தடுமாற்றம் எய்திவிடும். அறிவினால் உரம்பெற்றதோர் உண்மையை உள்ளவாறு உய்த்துணர்வினொடு கலந்தக்கால் சூறுவளி வைகிய சூழலினும், அம்மனத்தின் துணிவு நாலலும் நடுங்கலுமின்றிப் பெருவரையென நிற்கலாகும். நாழி ஒன்றிரண்டு கழியுமுன், வேற்றுமைஉற்றிலா அவள், கூனியெனும் கயத்தி கூறிய அற்ப நயப்புரைக்கு நனிநெகிழ்ந்து வேற்றுமையேயன்றி வெங்கண் வன்மும் பேரவாவும், பிறர் துயர்க் கிரங்காப் பேயின் கொடுமையும் (கைகேசி) பெற்றவளாயினாள். மற்று வேற்றுமை மாற்றிய கோசலையின் ஆற்றலோ அசையாது நின்றது"

" இதனால் கம்பராமாயணக் கட்டுரையாளர், பட்டினத்தடிகள் புகழும் மனதற்ற இயற்கைச் செம்மையைப்பரிகசித்து நகைக்கின்றாரன்றோ. செய்கின்ற கருமத்தைச் சோதித்து, "நல்லன்" என்ற நினைவு எழும்படி ஆற்றவேண்டுமென்று நீங்களும் போனநாள் தலையங்கத்தில் புகன்றிருப்பவை, முன்னே "பெருமையின் பெருமை" என்றெழுதிய தலையங்கத்தோடு முரண்படுகின்றன. எனினும், அமைதியொன்று இல்லாமல் இப்படி முரண்விளையத் தாங்கள் வரையமாட்டீர்கள் என்னும் நம்பிக்கையும் எனக்கு இல்லாமற் போகவில்லை. ஆதலால் அம் முரணைத் தீர்த்து எனது சந்தேகத்தைத் தெளிவிக்க வணக்கமுடன் வேண்டிக்கொள்கின்றேன்"

* * * *

இக் கடிதத்தை யாம் மிகவும் அருமையுடன் பாராட்டுகின்றோம். இந்நண்பர் காட்டும்வரையில், இவ்வகை ஐயம் விளைவதற்கு இடமுண்டென்று யாம் எண்ணவில்லை. இவர் இதனை நன்கு ஆராய்ந்து எம்மைக் கேட்டதற்கும் மிக்க நன்றியுடையவரா யிருக்கின்றோம். இங்கு முதலில் யாம் உரைத்தபடி காரண காரியக் கொள்கையைக் கருத்துட்கொண்டு மறுமுறை சிந்திக்குமளவில், முரண்போல் தோன்றுமிது மறைதல்வேண்டும். எனினும், இது ஆர அமர்ந்து ஆராய்தற் குரியதே.

# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[90-வது பக்கத் தொடர்ச்சி]

### (IX) பிரமாணம்—பிரமேயம்

**நாம்** உலகத்தில் அஞ்ஞான வடிவாய்ப் பிறந்தது முதல், நமக்குப் பிரமை விளைவிக்கும் முன்னிலைத்தோற்றம் யாவும் பிரமேயம் ஆகும். அத்தோற்றத்தில் இது இன்னதென்று நிச்சயிப்பதற்குக் காரணங்களாவன பிரமாணங்கள். (பிரமை என்பது ஆங்கிலத்தில் Presentation Continuum என்று கூறப்படும்.) பிரமையென்பது தருக்கத்தில் யதார்த்த அநுபவம் என்று பொருள்படும். யதார்த்தமென்பது ஐயம் திரிபு நீங்கியது, என்பர். ஐயம் ஒரு பொருளை மாறுபட்ட பல பொருளாக உணர்தல். கட்டையை, கட்டையோ கள்வனோ என்று எண்ணல் ஐயம் ஆகும்.

அனுச யப்பட் டதுவிது வென்னாதே
கனிம னத்தொடு கண்களு நீர்மல்கிப்
புனித னைப்பூவ னூரனைப் போற்றுவார்
மனித ரிற்றலை யான மனிதரே.

திருப்பூவனூர் - திருக்குறுந்தொகை 6.

[" அனுசயப்பட்டு அது விது வென்னல்" ஐயமாகும்.]

திரிபாவது கட்டையைக் கட்டையென்னும் உணர்ச்சியின்றிக் கள்வனென்று தீர்மானிப்பதாகியஉணர்வு. பார்த்தன் பரமனை வேடனென்று எண்ணியது திரிபு.

ஏன வேடத்தி னானும் பிரமனுந்
தான வேடமுன் றாழ்ந்தறி கின்றிலா
ஞான வேடன் விசயற் கருள்செயுங்
கான வேடன்றன் வெண்கா டடைநெஞ்சே.

திருவெண்காடு - திருக்குறுந்தொகை 9.

இன்னபடி, ஐயம் திரிபு எனும் இரண்டு விலக்குக்களையும் நீக்கிப் பெறும் யதார்த்தஞானத்தையே பிரமையென்று தர்க்கநூல் கூறும். அதை அப்பர் திருநல்லூர்-திருத்தாண்டகச் செய்யுட்கள் சிலவற்றில் வெகுஅழகாக வர்ணிப்பதைக் காண்க:—

குலங்கண்மிகு மலைகடல்கண் ஞாலம் வைத்தார்
குருமணிசே ரரவைத்தார் கோலம் வைத்தார்
உலங்கிளரு மரவத்தி னுச்சி வைத்தார்
உண்டருளி விடம்வைத்தா ரெண்டோள் வைத்தார்
நிலங்கிளரும் புனல்கனலு ளநிலம் வைத்தார்
நிமிர்விசும்பின் மிசைவைத்தார் நினைந்தா ரிந்நாள்
நலங்கிளருள் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

திருநல்லூர் - திருத்தாண்டகம் 3.

உற்றுலவு பிணியுலகத் தெழுமை வைத்தார்
உயிர்வைத்தார் உயிர்செல்லுங் கதிகள் வைத்தார்
மற்றமரர் கணம்வைத்தார் அமரர் காணா
மறைவைத்தார் குறைமதியம் வளர வைத்தார்

செற்றமலி யார்வமொடு காம லோபஞ்
சிறவாத நெறிவைத்தார் துறவி வைத்தார்
நற்றவர்சேர் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானூர் நல்ல வாறே

ஷை - 6.

இவ்வாறு உலகத்தில் தோன்றுகின்ற, மலை மரம் செடி விலங்கு மனிதர் முதலிய பொருள்கள், குழவிப்பருவத்தில் நமது தாய்தந்தையர் காட்டிப் பெயர் குறித்ததனுல் நாமும் அப்பெயர் இட்டு அழைக்கின்ரேம். இதனலே பாஷை வேறுபாடு உண்டாயிற்று. பல பாஷையின் பல பேரால் ஒரு பொருளின் உணர்ச்சி யுண்டாகின்றது. அதன் குணங்களின் உணர்ச்சியும் அவ்வப்பாஷை ரூபத்திலேயுண்டாகின்றது. அந்த அந்த மத சம்பந்தத்திலும் காரணங்கள் காட்டப்படுகின்றன. உண்மையநுபவம் ஸ்மிருதிக்கு விலக்கென்று தர்க்கநூலார் கூறினும் ஸ்மிருதியின்றி அநுபவம் விருத்தியடைவதற்கு ஏதுவில்லை. எனினும், உலகத்தில் பெரும்பாலும் ஸ்மிருதியானது தர்க்கஉணர்வுக்கு இடையூறுய்த் திரிபு (விபரீத ஞானம்) உண்டாக்குவது இயல்பாகும்.

நெஞ்சினைத் தூய்மை செய்து நினைக்குமா நினைப்பி யா
வஞ்சமே செய்தி யாலோ வானவர் தலைவ னேநீ! [தே
மஞ்சடை சோலை தில்லை மல்குசிற் றம்ப லத்தே
யஞ்சொலாள் காண நின்று வழகநீ யாடு மாறே.

கோயிற்றிரு நேரிசை - பண் - கொல்லி 9.

என்னும் அப்பர் பாசுரம் நோக்குக.

ஆதலால் ஸ்மிருதியே * குழவிப்பருவத்தின் அநுபவத்திற்கு அடிப்படையாக, அதனைத் தொடர்ந்து அநுபவ ஞானம் உண்டாகின்றது. இதுவே உலகவழக்கில் யதார்த்த அநுபவம், அல்லது பிரமை, என்னப்படும். அநுபவம் உண்மையனுபவம் என்றும், இன்மை அநுபவம் என்றும் இருவகைத்து. பிரமைக்குக் காரணம் பிரமாணம் ; அதனுல் உண்டாகும் அநுபவம் யதார்த்த அநுபவம். பிரமாணப்போலியால் தோன்றிய அநுபவம் இன்மையனுபவ மாகும்.

எனவே பிரமாணம் இலக்கியம். பிரமையின் காரணத்தன்மைஅதன் இலக்கணமாகும். அந்தக்காரணத்தைச் சிறப்புக் காரணம் என்பர் மேலோர். இது பொதுக் காரணமாகிய காலம் திக்கு முதலியவற்றில் செல்லும் மதிவியாப்தியை நீக்கி, உயர்ந்த சாதகதமத்தில் மனதைச் செலுத்தி அறியப்படுவதாகும்.

காரணம் மூன்றுவகையாம். அவையாவன:—
(1) சமவாயி காரணம், (2) அசமவாயி காரணம், (3) நிமித்த காரணம் என்பன.

சமவாயி காரணமாவது மூலாதாரமான காரணம். நூல் ஆடைக்குச் சமவாயி காரணம். இதை ஆதி காரணம், முதற்காரணம், உபாதானகாரணம் என்னும் பல பெயர்களால் அழைப்பர். இக்காரணம் மூன்று வகையில் காணப்படும். அவை, ஆரம்பம் பரிணமம் விவர்த்தம் எனப்படுவன. இம்மூன்றில் ஒன்றைத் தான் அங்கீகரிப்போமென முற்காலத்தில் வாதிகள் போராடினரென அறிகின்ரும். எனினும், ஆராய்ந்து உற்றுநோக்கின் சமவாயிகாரணம், ஆரம்பம் பரிணமம் விவர்த்தம் என்னும் மூவகைத் தோற்றத்திலும் காணப்படும். இம் மூன்றுவகையில் சமவாயிகாரணம் வெளியாதல் ஆங்கிலத்தில் (Evolution) இவலியூஷன் என்னும் கோட்பாட்டுக்கு உடன்பாடாகும்.

நிலந்தரத்து நீண்டுருவ மான நாளோ
நிற்பனவு நடப்பனவு நீயே யாகிக்
கலந்துரைக்கக் கற்பகமாய் நின்ற நாளோ
காரணத்தால் நாரணனைக் கற்பித் தன்று
வலஞ்சுருக்கி வல்லசுரர் மாண்டு வீழ
வாசுகியை வாய்மடுத்து வானோ ருய்யச்
சலந்தரனைக் கொல்வதற்கு முன்னோ பின்னோ
தண்ணூரூர் கோயிலாக் கொண்ட நாளோ.

திருவாரூர் - திருத்தாண்டகம் - 7.

என்னும் அப்பர் திருப்பாசுரத்தில் இந்தச் சமவாயி காரணம் விளங்குவது காண்க.

அசமவாயிகாரணமாவது சமவாயிகாரணத்தோடு சம்பந்தமுடையதாய்க் காரியத்தை யுண்டுபண்ணுவது யாதோ அதுவே அசமவாயி காரணமாம். உதாரணம், ஆடைக்கு நூல் அசமவாயி காரணம் இது சிலவிடத்துக் குணமாயும் சில விடத்துக் கிரியையாயு மிருக்கும். சமவாயி காரணத்தை அணுகி யிருப்பதும், துணிந்த காரணத்தன்மை யுடையதுமா யிருப்பது எதுவோ அது அசமவாயிகாரண மென்று கூறப்படும். ஆடைக்கு நூல் இயைபாகிய குணம்-அசமவாயிகாரணம். நூலுருவமும் ஆடையை யடைந்தஉருவத்திற்கு அசமவாயிகாரணமாகும். எனவே அசமவாயி காரணமாவது, காரணப்பொருளின் இயற்கைக்குணமா யிருந்து, அது காரியப்பொருளில் தொக்கி நின்று ஆராய்ச்சியில் வெளிப்படையாவதாம்.

திகழுஞ் சூழ்சுடர் வானொடு வைகலும்
நிகழு மொண்பொரு ளாயின நீதியென்
புகழு மாறும லானுன பொன்னடி
இகழு மாறிலே னெந்தைபி ரானிரே

மனத்தொகை—திருக்குறுந்தொகை - 8.

என்னும் அப்பர் பாசுரத்தின் நோக்கத்தைக் காண்க. எதனுடன் எதற்கு, நேரான சம்பந்தமில்லாமல் ஒன்றன் வாயிலாகச் சம்பந்த மிருக்கின்றதோ, அதனோடு அதற்கு இருப்பதைப் பாம்பரைச்சம்பந்த மென்பர். ஆடை யுருவத்திற்கும் நூலுருவத்திற்கும் நேர் சம்பந்தமில்லை. ஆயினும் ஆடையின் வாயிலாய்ச் சம்பந்த மிருத்தலின் அவ்வாடையுருவத்துடன் நூலுருவத்திற்குப் பாம்பரைச்சம்பந்த முண்டென்று கொள்க. ஆடையுருவத்திற்கு ஆடை சமவாயி காரணம். நூலியைபு அசமவாயி காரணம் என்பர் தர்க்கநூலார். எவ்வாருயினும் நாம் ஆராய்ந்து உற்றுநோக்கின், அசமவாயி காரணமே, சமவாயி காரணமாகப் பரிணமித்தலை உணரலாம்.

"மரத்தை மறைத்து மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை"

என்பதுபோல், காரியமும் சமவாய அசமவாய காரியங்களும் ஒக்குமென்ரும்.

* முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய வாரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானுள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள்
அகன்ரு ளகலத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தா டன்னுமங் கெட்டாள்
தலைப்பட்டா ணங்கை தலைவன் ருளே.

திருவாரூர் - திருத்தாண்டகம் - 7



நிமித்தகாரண மாவது, இது சமவாயி காரணமும் அசமாவாயி காரணமு மன்ருகிய வோர் காரணமாம். நிமித்த காரணம் சிலவிடத்துச் சேதனமான சித்துப் பொருளாயும் அசேதனமான ஜடப் பொருளாயும் இருக்கலாம். ஆடையை நெய்வோன், ஆடைக்கு ஒரு நிமித்த காரணம் ஆவான். இப்படி, நிமித்தகாரணமானது உற்பத்திக் காலத்தில் மாத்திரமும், சில காரியமுள்ள வரையிலும் இருக்கும்.

கட்டி பொக்கும் கரும்பி னிடைத்துணி
வெட்டி வீணைகள் பாடும் விகிர்தனர்
அட்ட மூர்த்தியண் ணுமலை கைதொழ
நட்ட மாடியை நண்ணநன் காகுமே.

திருவண்ணுமலை - திருக்குறுந்தொகை - 7

ஷை பாசுரத்தில் ஒருவினைக்குள்ள மூவகைக்காரணங்களையும் காண்க.

இம் மூவகைக் காரணங்களுள் யாதாயினும் மிகவும் உயர்ந்து சிறந்து விளங்குமாயின் அது அசாதாரண காரணம் அல்லது கரணம் எனப்படும். ஆதலால் பிரமாணம் பிரமைக்குக் கரணமாகும்.

காரணத்தா லாக்கப்படுவது காரியம். எல்லாக் காரியங்களுக்கும் ஈஸ்வரனும், அவரது ஞானம் இச்சை திக்கு காலம் அதிர்ஷடம் பிராகபாவம், பிரதிபந்த அபாவம் என்பவைகளும் ஆக இந்த ஒன்பதும் பொதுக் காரணங்களாம். இவற்றை முறையே அப்பர் தேவாரப் பாசுரங்களா லுணர்க:—

ஈஸ்வரனுகிய பொதுக் காரணம்

தானலா துலகமில்லை சகமலா தடிமையில்லை
கானலா தாடலில்லை கருதுவார் தங்களுக்கு
வானலா தருளுமில்லை வார்குழன் மங்கையோடும்
ஆனலா தூர்வதில்லை யையனை யாறனூர்க்கே.

திருவையாறு—திருநேரிசை - 1.

அவரது ஞானம் *

திருவி னுதனுஞ் செம்மலர் மேலுறை
யுருவ னுயுல கத்தி னுயிர்க்கெலாங்
கருவ னுகி முளைத்தவன் கானூரிற்
பரம னுய பரஞ்சுடர் மூர்த்தியே

திருக்கானூர்—திருக்குறுந்தொகை - 1.

இச்சை

பாடிச் சென்று பலிக்கேன்று நின்றவர்
ஓடிப் போயினர் செய்வதொன் றென்கொலோ
ஆடிப் பாடியண் ணுமலை கைதொழ
ஓடிப் போகுநம் மேலை வினைகளே.

திருவண்ணுமலை—திருக்குறுந்தொகை - 4.

விச்சை யாவதும் வேட்கை யாவதும்
நிச்ச னீறணி வாரை நினைப்பதே
யச்ச மெய்திய ருகணை யாதுநீர்
பிச்சை புக்கவ ரன்பரைப் பேணுமே.

காலபாராயணத் திருக்கறுந்தொகை - 8.

திக்கு

எத்திக்கு மாய்நின்ற விறைவன் றன்னை
யேகம்ப மேயானை யில்லாத்தெய்வம்
பொத்தித்த மயிர்பறிக்குஞ் சமணர் பொய்யிற்
புக்கழுந்தி வீழாமே போத வாங்கிப்
பத்திக்கே வழிகாட்டிப் பாவந் தீர்த்துப்
பண்டைவினைப் பயமான வெல்லாம் போக்
கித்தித்தென் மனத்துளே யூறுந்தேனைச் [கித்
செங்காட்டங் குடியதனிற் கண்டேனுனே.

திருச்செங்காட்டங்குடி - திருத்தாண்டகம் - 7,

காலம்

இருநிலனுய்த் தீயாகி நீருமாகி
யியமனனு யெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி ருகி
யாகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணு மாணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையா யின்ருகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிக ணின்ற வாறே.

நின்ற திருத்தாண்டகம், 1.

அதிர்ஷ்டம்

எந்த மாதவஞ் செய்தனை நெஞ்சமே
பந்தம் வீடவை யாய பராபர
னந்த மில்புக ழாரூ ரானெறி
சிந்தை யுள்ளுஞ் சிரத்துளுந் தங்கவே.

திருவாரூர் - திருக்குறுந்தொகை 2.

பிராக்கபாவம்—பிரதிபந்தகாபவம்.

உச்சி வெண்மதி சூடிலு மூனருப்
பச்சை வெண்டலை யேந்திப் பலவிலம்
பிச்சை யேபுகு மாகிலும் வானவர்
அச்சந் தீர்த்தரு ளாயென் றடைவரே .

சித்தத்தொகை - திருக்குறுந்தொகை 7.

இவ்வாறு பொதுக்காரணங்களைக் கரணமென்று கொள்ளாமல், ஒருபொருளின் சிறப்புக்காரணங்களைக் கரணமென்றெடுத்தோதுவர் தர்க்கநூலார். பிரமைக்கு (Experience) கரணம் பிரமாணமாகும். பிரமை, பிரமேய மன்று. பிரமேயமென்பவை பிரமாணத்தால் அறியப்படும் பொருள்கள் —அப்பொருள்களைப் பற்றிய அறிவு அல்லது புத்தி அநுபவம் ஆகிய இவை பிரமையின் தோற்றங்களாம்.

மாதினையோர் கூறுகந்தாய் மறைகொ ணுவா
மதிசூடி வானவர்க டங்கட் கெல்லாம்
நாதனே யென்றென்று பரவி நாளும்
நைந்துருகி வஞ்சமற் றன்பு கூர்ந்து
வாதனையான் முப்போதும் பூநீர் கொண்டு
வைகல் மறவாது வாழ்த்தி யேத்திக்
காதன்மையாற் ருெழு மடியார் நெஞ்சினுள்ளே
கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே.

திருக்கன்ருப்பூர் - திருத்தாண்டகம் 1.

இதுசிவனடியார் பிரமை. நம்மனோர்க்கு இத்தகைய பிரமை யுதிப்பது அரிது.

இனிப் பிரமாணத்தின் வகைகளை ஆராய்வோம்.

* மறைகொண் டமனத் தானை மனத்துளே
நிறைகொண்ட நெஞ்சி னுள்ளற வைம்மினே
கறைகண் டனுறை யுங்கடம் பந்துறை
நிறைகொண் டவினை தீர்த்தொ ழிமினே.

திருக்கடம்பந்துறை திருக்குறுந்தொகை - 5.

## குன்றுடையானும் மக்களும்

[88-வது பக்கத் தொடர்ச்சி]

குன்றுடையானைச் சேவகர் அரண்மனைக்குத் தள்ளிக்கொண்டு போனபொழுது கவுண்டர்கள், ஊரார் பத்துப்பேர்புடைசூழ ஆசாரமண்டபத்தில் வீற்றிருந்தார்கள். குன்றுடையான் உயிரோடு திரும்பிவந்ததைக் கண்டு அவர்கள் ஆச்சரியமுற்று, 'ஏனடா, தடிப்பயலே, எப்படியடா சாவாமல் பிழைத்தாய் ?' என்றார்கள். குன்றுடையான், 'மாமா, ஏழைக்குத் தெய்வந் துணை. உங்கள் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொள்ளலாமென்று இரண்டுநாள் வழிநடந்து உங்களைநான்வந்தடைந்தேன். நீங்களோ பெண் கொடுப்பதில்லை என்கிறீர்கள். பெண்ணைத் தடுத்து மறித்துக் கட்டும் உரிமையோ எனக்குண்டு. இனிப் பெண்கொடுக்காவிட்டால் நான் அப்புறம் நகரேன்' என்றான். பத்துப்பேர் முன்னிலையில் ஒரு மாட்டுக்காரன் தங்களைப் பெண் கேட்டமைக்குக் கவுண்டர்கள் கொதிப்புற்று, 'அடே, இவனைப் பிடித்துத் தூக்கிலிடுங்கள்' என்றுகூறச் சேவர் குன்றுடையானை நெருங்கினர். அவர்களைக் கண்டு குன்றுடையான் நடுங்கி, 'ஐயோ ! மாமா, நீங்கள் என்னைக் கொல்லவேண்டாம். நான் இனி உங்களைப் பெண் கேட்பதில்லை. பூட்டியிருக்கிற விலங்குகளைக் கழற்றி என்னை அனுப்பிவிடுங்கள்' என்று இரந்து கேட்டான். அங்குக்கூடியிருந்த ஊரார் பத்துப்பேரும் அவன் நிலைமைக்குப் பரிந்து, அவனை விடுதலைசெய்து அனுப்பிவிடுமாறு கவுண்டர்களை வேண்டினர். பின்பு சேவகர்கள் கவுண்டர்களுடைய ஆணையினால் குன்றுடையானை விடுதலைசெய்ததும், அவன் மாமன்மாரை நோக்கி, 'மாமா, நான் போகிறேன். என்னுடைய கவைக்கோலையும் கம்பளியையும் கொடுக்கச்சொல்லுங்கள்' என்றான். அவற்றைச் சேவகர்கள் கொடுக்கப்பெற்றுக் கம்பளியை மடித்துத் தோளிற் போட்டுக் கவைக்கோலை யூன்றி, ஐயன் குன்றுடையான் அரண்மனை வாசல்கடந்து தெருவழியே நடந்துபோனான்.

அவன் திக்கற்றுத் தெருவிற் போதலை அவ்வூர்ப் பெரியகுடியானவன் கண்டு, அவன்மீது இரக்கமுற்று, அவனைக் கூப்பிட்டுச் சாப்பாடு கொடுத்து, தன் வீட்டில் ஒருநாள் இருத்திவைத்தான். இது நிற்க;

மாமன்மார்களுடைய அரண்மனையில் சந்தனத்தாக் கவுண்டன் மகள் தாமரைநாச்சி அன்று பக்குவமானாள்.

தாமரைநாச்சி, சந்தனத்தாக் கவுண்டன் திருவாலவாயனை வேண்டி அரியதவமிருந்துபெற்ற பெண்; பதினெட்டாட்டைப்பிராயத்தாள்; தந்தையர் உயிருக்குயிராய் வளர்த்த அருமைச் செல்வி; விசாலமான கண்களும் நீண்டபுருவங்களும் சிற்றடிகளும் வாய்ந்த கூந்தலழகி. அரண்மனையின் வாசலைக் கடந்தறியாது வெள்ளிக்கலத்தில் சோறுண்டு, பணிப்பெண்டிர் மருவும் முல்லையுஞ் சூட்டச்சூடி மகிழ்ந்து திரியுமொரு பெண்மானனையவள். மாசற்ற உளத்தினள்; திருவாலவாயனை நினைந்த நெஞ்சினள்; திருநீறு தரித்த நெற்றியினள்; உயிரினும் மானத்தையே பெரிதெனமதிப்பவள்; கொண்டதை முடித்தலிற் சோர்வில்லாதவள்.

மகள் பக்குவமடைந்தாள் என்றசெய்தியை மனைவி சொல்லக்கேட்டுக் கவுண்டர் மகிழ்ச்சி மிகவடைந்து, மகளுக்கு நீராட்டிச் செய்யத்தக்க சீர் சிறப்புகளைச் செய்யும்படி உத்தரவிட்டு, தம்பி குங்குமத்தாக் கவுண்டனையும் பக்கத்திலிருத்தி, சோதிடர்களை அழைப்பித்தார். சோதிடர்கள் வந்து தாமரை பக்குவமடைந்த நேரத்தைக் கணித்துப்பார்த்து, 'பிரபுக்களே, தங்களுடைய அருமைப் புதல்வி தாமரைநாச்சி, பங்குனி மாதம் பதினேழாந் தேதி, ஞாயிற்றுக் கிழமை, இரட்டை மத்தியானம், மூல நக்ஷத்திரத்தில் பக்குவமானாள். நாளும் பொழுதும் நல்லவையல்ல. இந்தப் பெண்ணை மூன்றுநாளில் வீட்டைவிட்டு வெளியே கடத்தவேண்டும். இனி இப்பெண்ணின் முகத்தில் நீங்கள் விழிக்கக்கூடாது. நாங்கள் சொல்கின்றபடி செய்யத்தவறினால் உங்கள் பட்டம் அழியும் ; மூன்றேமுக்கால் நாழிகையில் அரண்மனை தீப் பிடித்து வேகும் ; உங்கள் குடும்பம் அடியோடே நசிக்கும்' என்று சொல்லி எழுந்து போனார்கள். இதைக்கேட்டுக் கவுண்டர்களும் அவர்களுடைய மனைவியர்களும் சொல்லொணாத் துயருற்று, தங்களுடைய அருமைப் புதல்விக்கு நேர்ந்த கதியை நினைந்து நெடுநேரம் விம்மி விம்மியழுது, இனிச்செய்யலாவது ஒன்றுமில்லையென்றுசிறிது தேறி, பக்கலில் அழுதுகொண்டு நின்ற ஆண்மக்கள் இருவரையும் நோக்கி, 'அப்பா, சிவக்கொழுந்து, அப்பா, மருக்கொழுந்து, இந்தப் பாவத்திற்கு இனி நாம் என்னசெய்வோம் ? மூன்றுநாளில் உங்கள் அக்காளை வீட்டைவிட்டு அப்புறப்படுத்த வேண்டுமாம்; இந்தச் செய்தியைக் கேட்டால் எந்த மாப்பிள்ளை நம்வீட்டுக்கு வருவான்? இந்த மூன்று நாளும் கழிந்துபோனால் நமது பட்டம் அழியுமாமே, அரண்மனை வேகுமாமே. ஐயோ! இதற்கு என்னசெய்வது? உங்கள் அத்தைமகன் குன்றுடையாக்கவுண்டன் பெண்கேட்டான். நாம் இல்லையென்று சொல்லி அவனை அடித்துச் சிறையிலிட்டோம். அவனுடைய சாபமேதான் இவ்வாறு விளைந்ததோ! இன்று காலையிலும் அவன் பெண்கேட்டு அவமானப்பட்டுப் போனானே. இனி அவனைத் தவிர நமக்கு வேறு மாப்பிள்ளை இல்லையே. அவன் இந்த ஊரிலேதான் எங்கேயாவது இருப்பான். அவனைத் தேடிப் பிடித்துக் கொண்டுவாருங்கள். அக்காளை அவனுக்குக் கலியாணம் பண்ணிக்கொடுத்து மூன்று நாளில் வீட்டைவிட்டு அனுப்பிவிடுவோம்; போங்கள் போங்கள்' என்றார்கள்.

சிவக்கொழுந்தும் மருக்கொழுந்தும் குன்றுடையான் போனவழி கேட்டு, அவனைத் தேடிக்கொண்டு வருகையில், பெரியகுடியானவன் வீட்டுத் திண்ணையில் கம்பளியையும் கைக்கோலையும் பக்கத்தில் வைத்துத் தூணோடு சார்ந்து உட்கார்ந்திருந்த மாமனைக் கண்டு, அவன் பக்கலில் பல்லிளித்துக்கொண்டு வந்து நின்று 'மாமா, வாருங்கள், வாருங்கள். தந்தையர் உங்களைக் கையோடே அழைத்துவரச் சொன்னார்' என்றார்கள். அதைக்கேட்டுக் குன்றுடையான் சீறி, 'போங்களடா, பைத்தியகாரப் பயல்களே ! பிடரியில் கைபோட்டுத் தள்ளினவர்கள் வீட்டுக்கு இனி நான் அடியெடுத்து வைப்பேனா ? அவர்கள் முகத்தில் இனி நான் விழிப்பேனா ? வண்டரிக்கும் மாளிகையிற் போட்டுக் கொல்லப்பார்த்த பாதகர்களிடமா நான் வருவேன் ? போங்



களடா, இங்கே நிற்காதீர்கள்' என்றான். ஆயினும் அம்மைத்துனர்கள், 'போனது போகட்டும், மாமா, கோபித்துக்கொள்ள வேண்டாம். உங்களைக் கையோடு அழைத்துவரச் சொன்னார்கள். வாருங்கள், மாமா' என்று சொல்லி, இவன் கைகளைப் பிடித்து இழுத்தார்கள். குன்றுடையான் வெகுண்டு, கைகளைத் திமிறி, 'விடுங்களடா, காமாட்டிப் பயல்களே, இனிக் கையைத் தொட்டீர்களோ, பல்லை யுதிர்த்துவிடுவேன், பார்த்துக்கொள்ளுங்கள்' என்றுசொல்லி, திரும்பிக் கவைக்கோலைத் தன் கையிற்பற்றி அவர்களை வெருட்டினான். மைத்துனர்கள் மீண்டும் குன்றுடையான் கைகளைப் பற்றி வாதாடி, அவர்கள் இழுக்க, இவன் இழுக்க, கலகம் உண்டாகவே, ஊரார் பத்துப்பேர் அங்கே கூடி நியாயம் விசாரித்து, இருதிறத்தாரையும் சமாதானம் பண்ணினார்கள்.

அப்பொழுது பெரியகுடியானவன், 'குன்றுடையாக் கவுண்டன் போகேன் என்கிறான், மைத்துனர்கள் விடோம் என்கிறார்கள். மாமன்மார்கள் ஏன் அழைத்தார்களென்பது தெரியவில்லை. நான் போய்க் கேட்டுவருகிறேன்' என்று சொல்லி, சிவக்கொழுந்தையும் மருக்கொழுந்தையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு, அரண்மனையை அடைந்து, கவுண்டர்களைப் பார்த்து, நடந்ததைச் சொல்லி, 'குன்றுடையானை ஏன் அழைத்தீர்கள் ?' என்றான்.

சந்தனத்தாக் கவுண்டன், 'குன்றுடையான் பெண் கேட்டான். முதலில் கொடுக்க மறுத்துவிட்டோம். பின்பு அவன் நம்தமக்கைமகன் என்பதையும், தாமரைநாச்சி அவனுக்கு உரிமைப்பெண்ணே என்பதையும் ஆலோசித்துப் பார்த்து, அவனுக்கே பெண்கொடுக்கலாமென்று தீர்மானித்து அழைத்துவரச் சொன்னோம்' என்றான். பெரியகுடியானவன் 'நல்லது'. உங்கள் வார்த்தைக்கு மறுவார்த்தை உண்டா? நான் இப்பொழுதே போய்க் கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன். நீங்கள் பெண்வீட்டார்கள் ; நானும் மற்றும் ஊரில் உள்ளோரும் மாப்பிள்ளைவீட்டாரா யிருந்து கலியாணம் நடத்துகிறோம். அது உங்களுக்குச் சம்மதமா ? என்றான். சந்தனத்தாக் கவுண்டன், "ஆகா, அப்படியே செய்யலாம். நாளை நல்ல நாளாயிருப்பதால் நாளைக்கே கலியாணத்தை முடித்துவிடுவோம்" என்றான். பெரியகுடியானவனும் அதற்கிசைந்து, வீடு சேர்ந்து, குன்றுடையானுக்கு இச்செய்தியைச் சொல்ல அவன் கேட்டு உளங்களித்தான்.

அன்றையதினம் ஊரார் கூட்டங்கூடி, தலைக்கு இவ்வளவென்று வரியிட்டு வசூலித்து, ஆண்டி நாவிதன் வண்ணான் முதலியவர்களை வரவழைத்துப் பந்தல் போடுவித்தனர். மாமன்மாருடைய அரண்மனையும் தக்கவாறு, வாழை கமுகு பந்தல் தோரண முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டது. அன்றிரவு குலவழக்கப்போல் பெண்ணுக்குச் செய்யவேண்டிய சீர் சிறப்புக்களைச் செய்தார்கள். ஊரார் மறுநாள் பெரியகுடியானவன் வீட்டிலிட்ட பந்தலில் மாப்பிள்ளைக்குச் செய்யவேண்டிய சீர் சிறப்புகளைச் செய்து, முகூர்த்தக்கால் நட்டு மாப்பிள்ளையுடன் பிள்ளையார் கோவிலுக்குப் போய், தேங்காய்முகூர்த்தமிட்டு, ஊர்கோலத்தோடு மாப்பிள்ளையை அழைத்துக்கொண்டு பெண் வீட்டை யடைந்தனர்.

மணமகள் வீட்டில் வாத்தியங்கள் முழங்கின. ஐயன் குன்றுடையான் மணக்கோலத்தோடு பட்டுப்பாயில் வீற்றிருக்கின்றான்.

மாமன்மார்கள் வழக்கப்போல் முன்னூற்றறுபது பொன் பரியம் கேட்டனர். குன்றுடையான் கொடுக்க வகையில்லாமல் விழித்திருக்கையில் காட்டுப்பண்ணாடி கருப்பக்கவுண்டன், குன்றுடையான் தன்னிடம் ஆடு மேய்த்தபோது பட்டிபெருகித் தனக்கு அதிக ஊதியம் கிடைத்ததென்றும், அந்த ஊதியத்திலிருந்து முன்னூற்றறுபது பொன்னைத் தான் கொடுப்பதாகவும் சொல்லி, பரியம் செலுத்தினான். மாமன்மார் அதைப் பெற்றுக்கொண்டபின், மணமகன் செலுத்தவேண்டிய செலவுப்பணம் கேட்டனர். குன்றுடையான் 'செலவுப் பணம் நான் தருகிறேன்' என்று சொல்லி, ஐயன்மார் ஊரில் தான் எருமைமேய்க்கையில் சேர்த்துவைத்திருந்த ஐந்துபணத்தை மடியிலிருந்து அவிழ்த்துத்தந்தனன். மாமன்மார் அதையும் ஏற்றுக்கொண்டனர். பின்பு, ஆகவேண்டிய சீர்சிறப்புக்கள் நடந்தேறின. குன்றுடையான் பெண்ணுக்குத் தாலி கட்டினான்.

இவ்வாறாகக் கலியாணம் இனிதுமுடிந்தது. ஊரார்கள் மாமன்மார்களிடத்தும் குன்றுடையானிடத்தும் விடைபெற்றுக்கொண்டு வீடுசென்றார்கள். அன்றிரவு சந்தனத்தாக் கவுண்டன் தம் மனைவியைப் பக்கலில் அழைத்து, 'விடியுமுன் சீர் கொடுத்து மாப்பிள்ளையையும் பெண்ணையும் நம் வீட்டைவிட்டு வெளியே கடத்து; அவர்கள் முகத்தில் நான்விழிக்கமாட்டேன். இந்தப் பெண் பிறந்ததால் நமக்கு நல்ல பெருமை உண்டாயிற்று!" என்று சொல்லி விலகிப்போய்ப் படுத்துக் கொண்டான்.

குடியைக் கெடுக்கப்பிறந்த மகளிடத்தில் வெறுப்புக் கொண்ட அன்னை, 'ஒரு பெண் பிறந்ததால் என் வீட்டுக் கிந்தச் சிறுமை வந்தது. அந்தப்பெண் இருப்பதும் ஒன்றே, இறப்பதும் ஒன்றே. ஆயினும் கொடுக்க வேண்டிய கடனைக் கொடுத்துக் கழிக்கின்றேன்'; என்று முணுமுணுத்துக்கொண்டு, மகளுக்குச் சீதனம் கொடுத்தாள். என்னென்ன கொடுத்தாள் ? ஓட்டை வட்டிலும் செம்பும் கொடுத்தாள்; ஒருகொம்பொடிந்த மயிர்க்கோதி கொடுத்தாள் ; முறிந்த இராட்டை கொடுத்தாள் ; ஓட்டைப் படியும் அடிபோன கூடையும் பிய்ந்தமுறமும்கொடுத்தாள். தாமரைநாச்சி இவற்றைவாங்கி ஒன்றும் பேசாமற் கூடையில் வைத்தாள். அன்னை பழைய சேலை ஒன்று கொடுத்தாள். தாமரை அதையும் வாங்கிக் கூடையில் வைத்தாள். வரகுதின்னப் பெருங்குடியான் குலத்தில் பிறந்த குன்றுடையான் நாசமாய்ப்போவா னென்று அரைப்படி வரகரிசியையும் தாய் அளந்துபோட்டாள். தாமரை அதையும் வாங்கிவைத்தாள்.

பின் மாமனார் கொடுக்கவேண்டிய சீர்களையும் மாமியாரே கொடுத்தாள். என்னென்ன கொடுத்தாள் ? ஒற்றைக் கொம்போடு கூடிய ஒரு கிழட்டுமாடு கொடுத்தாள்; போட்டதைத் தின்னாத ஒரு பொக்கைவாய் வெள்ளாட்டையும் கொடுத்தாள் ; கொடுத்து, 'போய் வா, மகளே,' என்று சொல்லிநின்று புலம்பினாள்.

தாய் கொடுத்த சீதனங்களைப் பெற்றுக்கொண்டு தாமரைநாச்சி வாசலிலே நின்று, தான் பூண்டிருந்த நகைகளை, 'பிழையாத பிள்ளைக்கு இது வேண்டாம்,

இது வேண்டாம்' என்று சொல்லிச் சொல்லி ஒவ்வொன்றாகக் கழற்றி எறிந்தாள்; தான் கட்டியிருந்த பட்டுப் புடவையை அவிழ்த்தெறிந்து, தாய் கொடுத்த பழம்புடவையை உடுத்திக்கொண்டாள்; சும்மாடு சுற்றிக் கூடையைத் தலையின்மேல் வைத்து, கம்பளியையும் கவைக்கோலையும் கைவிடாத தன் கணவனை அழைத்துக்கொண்டு, அவள் உதிர்த்தகண்ணீர் உடுத்த ஆடையை நனைக்க, அரண்மனையை விட்டுப் புறப்பட்டாள். ஐயன் குன்றுடையான், மாமன் தனக்கு ஆடும் மாடும் கொடுத்தானென்று மகிழ்ந்து, அறைறை போட்டிக்கொண்டு நடந்தான்.

அவர்கள் அரண்மனையைக் கடந்து ஊர்வாசலை அடைந்தவுடன் தாமரை, 'நாதா, நாம் இனி எங்கே போய்ப் பிழைப்போம்?' என்றுசொல்லினளாய் நெட்டுயிர்த்து, கண்ணீர் வடித்தாள். குன்றுடையான், 'பைத்தியகாரி, ஏன் அழுகிறாய்? எனக்கு எருமை மேய்க்கத் தெரியும்; கலியாணஞ் செய்துகொண்டு தங்கள் ஊருக்கே திரும்பிவரும்படி ஓமந்தூர்ப் பிராமணர்கள் சொன்னார்கள். சின்னசாமிஐயன் நமக்குத் தக்கதுணை புரிவான்; வா, போகலாம்' என்றான். தாமரை சிறிது சிந்தித்து, 'அப்படியே செய்வோம். நடவுங்கள்' என்றாள்.

# தமிழ்ப் பாடம் 6.

## நள வெண்பா—சுயம்வர காண்டம்

[86-வது பக்கத் தொடர்ச்சி]

11. தேரிற்றுகளைத் திருந்திழையார் பூங்குழலின்
வேரிப் புனனனைப்ப வேயடைந்தான்-கார்வண்டு
தொக்கிருந்தா லித்துழலுந் தூங்கிருள்வெய்
[யோற்கொதுங்கிப்
புக்கிருந்தா லன்ன பொழில்.

பதப்பிரிவு:—தேரின் துகளை திருந்து இழையார் பூ குழலின் வேரி புனல் நனைப்பவே அடைந்தான் கார் வண்டு தொக்கு இருந்து ஆலித்து உழலும் தூங்கு இருள் வெய்யோற்கு ஒதுங்கி புக்கு இருந்தால் அன்ன பொழில்.

அன்வயம்:—திருந்து இழையார் பூங்குழலின் வேரிப்புனல் தேரின்துகளை நனைப்ப (சென்று), கார் வண்டு தொக்கு இருந்து ஆலித்து உழலும் தூங்கு இருள் வெய்யோற்குஒதுங்கிப் புக்குஇருந்தால்அன்ன பொழில், (நளன்) அடைந்தான்.

கருத்து:—தேர் செல்வதால் எழுந்த புழுதியைப் பின்தொடர்ந்து வந்த மாதர்களது கூந்தலில் அணிந்த பூவினின்றும் ஒழுகிய தேன் நனைத்து அடக்க, நளன் சென்று வண்டுகள் நிறைந்தும், மரஞ்செடிகளின் அடர்த்தியால் இருண்டும் இருந்த சோலையை அடைந்தான்.

பதவுரை.

கார் - கருமையான
வண்டு - வண்டுகள்
தொக்கு - சேர்ந்து
இருந்து - இருந்து
ஆலித்து - ஒலிசெய்து
உழலும் - திரிகின்ற,
தூங்கு - தங்கிய
இருள் - இருளானது
வெய்யோற்கு - சூரியனுக்கு
ஒதுங்கி - (பயந்து) விலகி
புக்கு - புகுந்து
இருந்தால் அன்ன - இருந்தது போன்ற
பொழில் - சோலையை,
தேரின் - தேர்செல்வதால் எழும்
துகளை - புழுதியை
திருந்து - நேர்மையான
இழையார் - ஆபரணங்களை யணிந்த மாதர்களது
பூ - பூக்களணிந்த
குழலின் - கூந்தலினின்று வழிகின்ற
வேரி - தேனாகிய
புனல் - நீர்
நனைப்பவே - நனைத்து அடக்கவே
அடைந்தான் - (நளன்) சேர்ந்தான்.

விளக்கம்:—அடைந்தான், (பயனிலை). [எவன் அடைந்தான்? நளன் (தோன்றா எழுவாய்)] எதை அடைந்தான்? பொழில் அடைந்தான் - பொழிலை அடைந்தான். எதைப் போன்ற பொழில்? புக்கு இருந்தால் அன்ன பொழில் - புகுந்து இருந்ததைப் போன்றபொழில். எது புக்கு இருந்தால் அன்ன பொழில்? இருள்-இருட்டு. எப்படிப்பட்ட இருள்? தூங்கு இருள் - தங்கிய இருட்டு. இருள் ஏன் புக்கு இருந்தது? ஒதுங்கி - (பயந்து) விலகி. யாருக்கு ஒதுங்கி? வெய்யோனுக்கு - சூரியனுக்கு. சூரியனுக்குப் பயந்து சோலையில் வந்து ஒளித்திருக்கும் இந்த இருட்டு எப்படிப்பட்டது? உழலும் இருள் - சஞ்சரிக்கப்பெற்ற இருட்டு. எவை உழலும் இருள்? வண்டு - வண்டுகள். எப்படிப்பட்ட வண்டு? கார்வண்டு - கரியவண்டுகள். கார்வண்டுஎப்படி உழலும்? ஆலித்து உழலும்-ஆரவாரம்செய்து சஞ்சரிக்கும். எப்படி ஆரவாரம் செய்யும்? இருந்து. எப்படி இருந்து? தொக்கு இருந்து - ஒன்று சேர்ந்து இருந்து. கரியவண்டுகள் ஒன்றுசேர்ந்து இருந்து ஆரவாரம்செய்து உலவப்பெற்ற அந்தத் தங்கிய இருள்களெல்லாம் (தமக்குப் பகையாகிய) சூரியனுக்குப் பயந்து இங்கு ஓடிவந்து ஒளிந்திருக்கின்றனவோ என்று கண்டவர்கள் சொல்லும்படி, மரஞ்செடிகளடர்ந்து இருண்டிருந்தசோலையை நளன் சென்றடைந்தவிதம் என்ன? நனைப்பவே அடைந்தான் - நனைத்து அடக்கிவிடும்படிசென்று அடைந்தான். எது நனைப்ப? புனல் நனைப்ப - நீர் நனைப்ப. எந்தப்புனல்? வேரிப்புனல் - மதுநீர் - தேன் ஆகிய நீர். எங்கிருந்து துளித்த வேரி? குழலின் - கூந்தலிலிருந்து. எதை அணிந்த கூந்தல்? பூ - பூக்களை. யாருடைய பூங்குழலின் வேரிப்புனல்? இழையார் - ஆபரணங்களை அணிந்த மாதர்களுடைய குழல். எப்படிப்பட்ட இழையார்? திருந்து இழையார் - நேர்மையான ஆபரணங்களை யணிந்தவர். திருந்திய ஆபரணங்களை யணிந்த மாதர்களது பூக்கள் சூட்டிய கூந்தலில் இருந்து துளித்த தேனாகிய நீர் எதை நனைப்ப நளன்பொழிலை அடைந்தான்? துகளை - புழுதியை. எந்தத் துகளை? தேரின் துகளை. நளன் ஏறிய தேர் சென்றதால் வீதியில் எழுந்த புழுதியைப் புனல் நனைப்ப அவன் பொழில் அடைந்தான்.



விரிவுரை:—இந்தச் செய்யுளும் 9-வது செய்யுளும் சேர்ந்து இச் சிறுகாவியத்தினுள் உலா என்னும் உறுப்பில் அமையும். உலா என்பது, கதாநாயகன் உலாப்போகின்ற வைபவத்தை வர்ணிக்கின்ற பாகம். அவன் வீதியில் பவனிவரும் சிறப்பையும் அழகையும் அதனைக்கண்ட மாதரும் பிறரும் அவனைக்கொண்டாடும் விதத்தையும் புனைந்துபாடவேண்டுமென்பது, நீர்வளம் திணைவருணனை திணைமயக்கம் போன்ற, காவிய இலக்ஷணங்களில் ஒன்று. பெருங்காவியங்களில் அரசபவனியைப்பற்றிப் பாடும் செயுள்கள் பல இருக்கும். இராமன் மிதிலாநகரத்தில் திருமணத்திற்குமுன் உலாவந்த அழகையும் அப்போது நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் சிறப்பிக்கக் கம்பர் ஒரு படலமே தனியாகப் பாடியிருக்கின்றார், பாலகாண்டத்தின்கண் இருக்கும் உலாவியற் படலம் என்பது அப்படலம். சீவகனது உலாவைத் திருத்தக்கதேவர் சிந்தாமணியில் பாடிய செய்யுள்களை இலக்கணையார் இலம்பகத்தில் காணலாம். உலாவப்போகும் ஒரு பெருமகனைக் காணுமாறு மாதரெல்லாம் வீதியில் விரைந்துவந்து அடைதலும், அவனழகில் ஈடுபட்டு உள்ளம் குழைதலும், மயல்கொண்டு அம்மாதர் காமப்பரவசராகி அவனைத்தொடர்ந்து ஏகுவதும், ஏகி அவனை வியந்து புகழ்வதும், இவைபோன்ற பிறவும் 'உலா' என்னும் காவியஅங்கத்திற்கு இலக்கணமாகும். 9-வது செய்யுளில், வதனமதி பூத்த குவளைக்காட்டிடையே போயினான், என்று கூறியதால் மாதரார் கண்களுக்கெல்லாம் நளன் இலக்காயினான் என்பதும், இச்செய்யுளில் வேரிப்புனல் தேரின் துகளை யடக்கியது என்றதால் அவர்கள் இவன் தேரைத் தொடர்ந்து மொய்த்தனர் என்பதும் கூறலாகின்றன.

---

12. நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப - மாணி
[றத்தான்
முன்னப்புட் டோன்று முளரித் தலைவைகு
மன்னப்புட் டோன்றிற்றே யாங்கு.

பதப்பிரிவு:—நீள் நிறத்தால் சோலை நிறம் பெயர நீடிய தன் தாள் நிறத்தால் பொய்கை தலம் சிவப்ப மாண் நிறத்தான் முன் அப்புஉள் தோன்றும் முளரித்தலை வைகும் அன்னம் புள் தோன்றிற்றே ஆங்கு.

அன்வயம்:—ஆங்கு, அப்புஉள் தோன்றும் முளரித்தலை வைகும் அன்னப்புள், நீள்நிறத்தால் சோலை நிறம் பெயர, நீடிய தன் தாள்நிறத்தால் பொய்கைத் தலம் சிவப்ப, மாண்நிறத்தான் முன், தோன்றிற்று.

கருத்து:—அந்தச் சோலையில் நளனுக்கு முன்னால் அன்னப்பறவை யொன்று வந்து தோன்றியது.

பதவுரை

ஆங்கு - அவ்விடத்தில்,
அப்புஉள் - நீரினுள்
தோன்றும் - முளைக்கின்ற
முளரித்தலை - தாமரையில்
வைகும் - வசிப்பதாகிய
அன்னப்புள்- அன்னப்பறவையொன்று(தனது),
நீள் - ஒளி (பொருந்திய)
நிறத்தால் - (சிறகின் வெண்மை) நிறத்தினால்
சோலை - (அந்தச்) சோலையினுடைய
நிறம் - (பசுமை) நிறமானது
பெயர - மாறவும்,
நீடிய - நீண்ட
தன் - அதனுடைய
தாள் - கால்களின்
நிறத்தால் - (சிவந்த) நிறத்தினால்
பொய்கைத்தலம் - தடாகங்கள்
சிவப்ப - சிவந்து காட்டவும்,
மாண் - பெருமைதங்கிய
நிறத்தான் - மார்பையுடைய நளனுக்கு
முன் - எதிரே
தோன்றிற்று - வந்து தோன்றியது.

அன்னம் பறந்துவந்தபோது அதனுடைய வெண்சிறகின் பேரொளிபரவச் சோலையின் பசுமைநிற மாறி வெளுத்ததென்றும், அதன் பவளம்போன்ற சிவந்த கால்களின் நிழல்படக் குளங்களும் சிவந்த நீர் உடையன போன்று தோன்றின வென்றும், அப்பறவையின் வருகையைக் கவி கூறுகின்றார்.

விளக்கம்:—தோன்றிற்று - வந்து தோன்றியது (பயனிலை.) எது தோன்றிற்று? புள் - பறவை (எழுவாய்). என்ன புள்? அன்னப்புள் - அன்னப்பறவை. அன்னப்பறவைகளின் தன்மை என்ன? வைகும் அன்னப்புள் - வசிக்கின்ற அன்னப்புள். எங்கே வைகும்? முளரித்தலைவைகும்-தாமரையில் வசிக்கின்ற. தாமரைகளின்தன்மை என்ன? தோன்றும் முளரி-வளர்கின்ற தாமரை. எங்கே? அப்புஉள் - நீரினுள். நீரிலே விளையும் தாமரையில் வசிப்பதாகிய அன்னப்பறவை எங்கே தோன்றியது? முன்-முன்னால். யாருக்குமுன்? நிறத்தான் முன்-மார்பையுடைய நளனுக்கு முன்னால். அவனதுமார்பு எப்படிப்பட்டது? மாண்-மாட்சிமை தங்கியது. நளன்முன் அன்னம் தோன்றும்போது என்ன நிகழ்ந்தது? பெயர - மாறுவதாக. என்ன பெயர? நிறம் பெயர - நிறம் மாறுவதாக. எது நிறம்பெயர? சோலை. எதனால் சோலை நிறம்பெயர? நிறத்தால். எப்படிப்பட்ட நிறத்தால்? நீள் நிறத்தால்-ஒளிபொருந்திய நிறத்தால். (எதனுடைய நீள் நிறத்தினால்? அன்னத்தின் வெண்மையாகிய சிறகினுடைய ஒளிபொருந்திய நிறத்தினால், என்பதை நாம் வருவித்துக் கொள்ளவேண்டும்). இன்னும் அப்பொழுது என்ன நிகழ்ந்தது? சிவப்ப - சிவந்ததாக. எது சிவப்ப? பொய்கைத் தலம்-குளங்கள். எதனால் சிவப்ப? நிறத்தால் - நிறத்தினால். எதனுடை நிறத்தினால்? தாள் நிறத்தால்-கால்களின் நிறத்தால். எப்படிப்பட்டதாள்? நீடிய தாள் - நீண்ட கால். எதனுடைய நீடியதாள்? தன் நீடிய தாள் - அன்னத்தினுடைய நீண்ட தாள்.

விரிவுரை:—அடைமொழிகள் (epithets) இரண்டு விதப்படும். ஒன்று, ஒருபொருளை அதுபோன்ற பிறபொருள்களினின்று பிரித்துக்காட்டும்படி சிறப்பாக வருவது. மற்றது, கூறிய பொருளின் இயற்கையைப் பொதுவாகக் காட்டுவது. கரிய மேகம் என்ப

தில், வெண்மேகமன்று கருமேகம் என்று சிறப்பாகச் சொல்வதால் கரியஎன்னும் இது சிறப்பு அடைமொழி (restrictive epithet). கரியகாகம், என்பதினில், வெண்காகம், பச்சைக் காகம், சிவப்புக் காகம் என வேறுநிறக் காகங்கள் இல்லாமையால், இங்குக் கரிய என்பது காகத்தின் இயற்கை நிறம் இன்னதென்பது ஒன்றையே குறிப்பதுபற்றி, அது இயற்கை அடைமொழி (descriptive epithet). அவ்வாறே, இச் செய்யுளில், அப்புள் தோன்றும் முளரி, முளரித்தலை வைகும் அன்னப்புள்,என்னும் வாக்கியங்களில்இருக்கும் அடைமொழிகள், முளரி அன்னம் ஆகிய இவைகள் இயற்கையாக எங்கே முளைக்கும் எங்கே வசிக்கும் என்பதைத்தான் காட்டுவதால் அவை இயற்கை அடைமொழிகள்.

குறிப்பு:—1. பெயர, சிவப்ப, என்னும் இரண்டு வினையெச்சங்களும் காரியப்பொருளில் வந்து, தோன்றிற்று என்னும், வினைமுற்றைக்கொண்டு முடியும்.

2. முளரித்தலை, பொய்கைத்தலம், என்பவைகளில் தலை, தலம், என்பன இடத்தைக்காட்டும் உருபுகள். முன் காரிகையார்கண்ணே, என்பதில், கண் இடத்தைக் காட்டும் உருபாய் வந்ததை நினைத்துக்கொள்க.

3. நிறம் - மார்பு. நீள் - ஒளி. முளரி - தாமரை. மாண் - மாட்சியை.

---

13. பேதை மடவன்னந் தன்னைப் பிழையாமன்
மேதிக் குலமேறி மென்கரும்பைக்—கோதிக்
கடித்துத்தான் முத்துமிழுங் கங்கைநீர் நாடன்
பிடித்துத்தா வென்றான் பெயர்ந்து.

பதப்பிரிவு:—பேதை மட அன்னம் தன்னை பிழையாமல் மேதி குலம் ஏறி மென் கரும்பை கோதி கடித்து தான் முத்து உமிழும் கங்கை நீர் நாடன் பிடித்து தா என்றான் பெயர்ந்து.

அன்வயம்:—மேதிக்குலம் ஏறி மென்கரும்பைக் கோதிக்கடித்து முத்தைத்தான் உமிழும் கங்கைநீர் நாடன், பெயர்ந்து, 'பேதை மடஅன்னம்தன்னைப் பிழையாமல் பிடித்துத் தா' என்றான்.

கருத்து:—'இந்த அன்னத்தைத் தப்பவிடாமல் பிடித்துத் தாருங்கள்' என்று நளன் தன்னுடன் வந்த மாதர்களைக் கேட்டான்.

பதவுரை.

மேதி - எருமைகளின்
குலம் - கூட்டமானது
ஏறி - (கரையில்) ஏறி
மென் - மிருதுவாகிய
கரும்பை - கரும்பை
கோதி - மென்று
கடித்து - கடித்து
முத்துத்தான் - முத்துக்களையே
உமிழும் - உமிழ்கின்ற
கங்கை - கங்கையாற்றினது
நீர் - நீர்வளம் மிகுந்த
நாடன் - நாட்டையுடைய நளன்,
பெயர்ந்து - (அந்த அன்னம் இறங்கிய இடத்திற்குப்) போய்,
பேதை - கபடமில்லாத
மட - இளமை பொருந்திய
அன்னம்தன்னை - அன்னத்தை
பிழையாமல் - தப்பவிடாமல்
பிடித்து - பிடித்து
தா - என்னிடத்தில் கொடு,
என்றான் - என்று (மாதர்களைப் பார்த்துக்) கூறினான்.

விரிவுரை:—மருதநிலத்திற் குரியதாகக் கூறப்படும் விலங்குஎருமை, பயிர்கரும்பு. எருமையின் மிகுதியையும், கரும்பின் செழிப்பையும் சொல்லி அந்நிலத்தின் வளப்பத்தைக் கவி இங்குக் காட்டுகின்றார். அந்தநாட்டுக் கரும்பைக் கடித்தால் எல்லாம் இரஸமாம், சக்கையென்பதே கிடையாதாம். அதனால்தான் எருமைகள் முத்தைத்தான் சக்கைக்குப் பதிலாக உமிழ்கின்றன. இப்பியிலேமாத்திரம் அல்லாமல் முத்துக்கள், யானைத்தந்தம் வாழை கரும்பு மூங்கில் முதலியவைகளிலும் பிறக்கும் என்று தமிழ்நூல்கள் கூறும். ஆதலால் முத்துமுதிர்ந்த கரும்புஎனறு இங்குக் கவி கூறுகின்றார். கடித்துத்தான் என்பதிலிருந்த தான் என்பதை எடுத்து முத்து என்பதனோடுகூட்டி முத்துத்தான் என்று நிறுத்தி, வேறொன்றும்உமிழாமல் எருமைகள்முத்தையே உமிழும் என்று பொருள் கொள்வதே முறை.

குறிப்பு:—குலம் என்ற சொல் கூட்டம் என்ற பொருளில் இங்கு வந்தது. இனி அதற்கே சிறப்பு என்ற பொருளும் உண்டு. குலமணி - என்றால் சிறந்த இரத்தினம்; மணிக்குலம் என்றால் இரத்தினங்களின் தொகுதி அல்லது, கூட்டம்.

---

14. நாடிமட வன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே—நீடியநல்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து.

பதப்பிரிவு:—நாடி மட அன்னத்தை நல்ல மயில் குழாம் ஓடி வளைக்கின்றது ஒப்பவே நீடிய நல் பைகூந்தல் வல்லியர்கள் பற்றி கொண்டுபோந்து தம் கோவின் முன் வைத்தார் தாழ்ந்து.

அன்வயம்:—நீடிய நல் பைங்கூந்தல் வல்லியர்கள், நல்ல மயில்குழாம் ஓடி வளைக்கின்றது ஒப்பவே, மட அன்னத்தை நாடி, பற்றிக் கொண்டுபோந்து தம் கோவின்முன் தாழ்ந்து வைத்தார்.

கருத்து:—மாதர்கள் அவ்வாறே அன்னத்தைப் பிடித்து நளனிடத்தில் கொடுத்தனர்.

பதவுரை

நீடிய - நீண்ட
நல் - அழகிய
பை - பசுமையான
கூந்தல் - கூந்தலையுடைய
வல்லியர்கள் - கொடிபோன்ற மாதர்கள்,
நல்ல - அழகிய
மயில் - மயில்களின்
குழாம் - கூட்டமானது
ஓடி - ஓடி
வளைக்கின்றது - சூழ்ந்துகொள்வதை
ஒப்பவே - போலவே,
மட - இளமைபொருந்திய
அன்னத்தை - அன்னத்தை
நாடி - அடைந்து



பற்றி - பிடித்து
கொடுபோந்து - கொண்டுபோய்,
தம் - தங்களுடைய
கோவின்முன் - அரசனுக்கு முன்னே
தாழ்ந்து - வணங்கி
வைத்தார் - வைத்தனர்.

விரிவுரை:—சாயலிலே மாதர்க்கு உவமை மயில். மயில்கள் சூழ்ந்து பிடிப்பதுபோல் அன்னத்தை மாதர் சூழ்ந்தனர், என்பது உவமைஅணி. மெல்லிய சரீரத்தால் பெண்களைக் கொடி என்றும், கொம்பு (பூத்த சிறு கிளை) என்றும் அழைப்பதுண்டு.வல்லி என்றால் பூங்கொடி.. ஆதலால் இங்கு அவர்களைக் கொடி போன்றவர் என்று குறிப்பிக்க வல்லியர் என்று கவி கூறுகின்றனர்.

குறிப்பு:—மட அன்னம், என்றபோது மடமை, என்பது இளமையைக் காட்டுகின்றது. இளமைக்கு உரிய தன்மை அறியாமை ஆகையால் மடமை, என்றால் அறிவில்லாத்தனம் என்ற ஒரு பொருளும்உளது. இந்தப் பொருளிலே, 'அவன் மடயன்,' 'இவன் மடயன்' என்று வழங்குகின்றோம். மடயன் வேறு, மடையன் வேறு.மடையன் என்றால் சமையற்காரன் என்று அர்த்தம். [மடைப்பள்ளி - சமையல் அறை, என்பது யாவரும் அறிவர்]

---

15. அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் [கொண்டுபோய்
மன்னன் றிருமுன்னர் வைத்தலுமே - அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு.

பதப்பிரிவு:— அன்னம்தனை பிடித்து அங்கு ஆய் இழையார் கொண்டு போய் மன்னன் திருமுன்னர் வைத்தலும்ஏ அன்னம் மலங்கிற்றுஏ தன்னுடைய வான் கிளையை தேடி கலங்கிற்றுஏ மன்னவனை கண்டு.

கருத்து:—அப்பொழுது அன்னம் மிகவும் கலங்கிப் பயந்தது.

பதவுரை

அங்கு - அவ்விடத்தில்
ஆய் - ஆராய்ந்தெடுத்த
இழையார் - ஆபரணங்களை அணிந்த மாதர்,
அன்னம் தனை - அன்னத்தை
பிடித்து - பிடித்து
கொண்டுபோய் - கொண்டுபோய்
மன்னன் - அரசனுடைய
திரு முன்னர் - அழகிய முன்னிலையில்
வைத்தலுமே - வைத்த உடனே,
அன்னம் - அந்த அன்னப் பறவை
தன் - தன்னுடைய
வான் - சிறந்த
கிளையை - சுற்றமாகிய பறவைகளை
தேடி - (துணைசெய்ய வருமோ என) தேடி
மலங்கிற்று - வருந்தியது.
மன்னவனை - அரசனை
கண்டு - பார்த்து
கலங்கிற்று - (என்ன செய்வானோ வென்று) கலங்கியது.

விரிவுரை:—பிடிபட்ட அன்னம் கலக்கம்கொண்டதென்று சொல்வதோடு புகழேந்திப்புலவர் நிறுத்திவிடுகின்றார். ஆனால் இந்த நளனுடைய சரித்திரத்தையே அதிவீரராமபாண்டியன் எழுதியுள்ள நைடதம் என்னும் நூலில் அன்னத்தைப் பிடிக்கின்ற இப்பாகம் மிக விரிவாகவும் அழகாகவும் எழுதப்பட்டிருக்கின்றது. அங்கே, தன் சிறகில் பிரகாசிக்கின்ற பொன்னிற்கு ஆசைப்பட்டுத் தன்னைக் கொன்று அப்பொன்னை எடுத்துக்கொள்ளத்தான் பிடித்தான் என்று அந்த அசட்டுஅன்னம் எண்ணிப் பயந்து, அரசனுக்குத் தன்பால் இரக்கம் உண்டாகும்படி சில வார்த்தைகள் சொல்கின்றது.

—•*=*•—

# ஜூலியஸ் ஸீஸர்

## [ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

188954

### அங்கம் 1. களம் 3.

[95-வது பக்கத் தொடர்ச்சி]

காஸ்க்கா :—நீ குறிப்பது ஸீஸரை அன்றோ, காஸ்ஸியஸ் ? (1)

காஸ்ஸியஸ் :—யாரே அது ஆயினும் ஆகுக—உடற்றசையும் அவயவங்களும் தம் முன்னோர்க் கிருந்தது போன்றே உரோமர்களுக் கிப்பொழுதும் இருக்கின்றனவாயினும் (2)-ஐயகோ கெட்டழிகின்றதே இக்காலம்! (3) நம் தந்தையர் மனங்களோ மாய்ந்தகல, அன்னைமார் இயற்கையாற்றான் ஆளப்பெறுகின்றோம். (4) நம் நுகமும் நோன்மையும் நம்மைப் பெண்ணீர்மை யுடையராய்க் காட்டித்தருகின்றன. (5)

காஸ்க்கா :—நாளைக்கே நம் 'செனட்' சபையினர் அரசனை[illegible]ருக்கின்றனர் சொல்[illegible] இவ்[illegible] மற்றைய இடங்களிலெ[illegible]ம்

[illegible] 600 008

(1) இவ் விரவைப்போன்ற கொடியவன் ஒருவன் உளன் என்று காஸ்ஸியஸ் முன் கட்டுரைத்து முடித்ததைத் தழுவிக் காஸ்க்கா இது கேட்கின்றான்.

(2) உடல்வலிமையும் அவயவ அமைப்பும் நம் முன்னோர்போலவே நாம் இன்றும் பெற்றிருப்பினும், வீரம் மானம் முதலிய ஆண்மைக் குணங்கள் நமக்கிப்பொழுது இல்லாமலொழிந்தன—என்பது பொருள்.

(3) வீரமும் மறந்து ஆண்மையும் இழந்து உரோமர்கள், ஸீஸர் ஒருவனுக்கு அடங்கி உயிர்வாழ இசைகின்றாரதலின் இக்காலம் கெட்டழிகின்றது—என்கின்றான்.

(4) அன்னைமார் இயற்கை=பெண்தன்மை. வீரமுடன் பொங்காமல், பெண்கள்போல் பலமற்றுப் பயந்தவர்களாய் அடங்கிக்கிடக்கின்றோம்.

(5) நுகம்=நுகத்தடி; பாரம் சுமக்கின்றதைக் குறிக்கின்றது. நோன்மை=துன்பத்தைச் சகித்தல். பெண்ணீர்மை=பெண்தன்மை. சுமத்திய பாரத்தை யெல்லாம் நாம் பொறுமையுடன் தாங்குமித் தன்மையினால் நாம் பெண்களென்றே மதிப்பதற் குரியவராகின்றோம்.

கடல்மீதும் தரைமீதும் தன் ஆணை செல அவன் தன் மகுடத்தைத் தரித்திருக்கலாம் (6)

**காஸ்ஸியஸ்:**—அப்பொழுது இச் சுரிகையை நான் எங்குத் தரித்திருப்பே னென்பதை யான் அறிவேன் (7) காஸ்ஸியஸ் அடிமையினின்று காஸ்ஸியஸை விடுதலைசெய்திடுவான் (8). அதனிற்றான், ஏ தெய்வங்காள், திறனில்லா நொய்ம்மையோரையும் மிக்க மிடலுடையவ ராக்குகின்றீர் (9) அதனிற்றான், ஏ தெய்வங்காள், கொடியோர் குரூரத்தைத் தோற்கடிக்கின்றீர் (10). கருங்கற் கூடமும், பித்தளைத் தகடுவேய்ந்த பெருஞ் சுவர்களும், காற்றற்ற பொதிபறையும், வல்லிருப்பு வளையங்களும், மனத்தின் வலிமையை அடக்கித் தன்னுள்ளே வைத்திருக்க மாட்டாவே (11). இவ்வுலகின் திடமுடைய இத் தடைகளுக்குச் சலித்திளைத்து வெறுத்தபோது, உயிர்தான் தன்னையே அகற்றிக்கொள்ளும் சக்தியிலேலா என்றும் குறைகின்றதில்லை (12). இதனை யான் அறிவெனெனின், மற்று இவ்வுலகடங்கலும் அறிக; கொடுமையின் நான் தாங்குமப் பாகத்தை நான் நினைத்தபோது உதறிவிடக் கூடும் (13).

**காஸ்க்கா:**—நானு மப்படியே செய்பக்கூடும். அப்படியே அடிமையாயினேன் ஒவ்வொருவனும், தன் சிறையினைத் தீர்த்துக்கொள்ளவல்ல சக்தியைத் தன் கையிலேயே தரித்திருக்கின்றான் (14).

**காஸ்ஸியஸ்:**—மற்று, ஸீஸர் ஏ னொரு கொடியோனாயிருத்தல் வேண்டும் (15)? பாவம் அவன்! ஓநாயா யவ னிருக்கமாட்டான் என்பதறிவேன் -உரோமர்கள் ஆடுகள்தானே என்று பார்க்கின்றான். உரோமர்கள் பெண்மான்க ளல்லவாயின் ஸீஸரும் சிங்கமல்லன் (16). பெரியதோர்தீயினை விரைந்துமூட்ட வேண்டுவோர் மெல்லிய புல்லைக்கொண்டேஎரியைத் துவக்குவார்.—என்ன செத்தை, என்ன கூளம், என்ன குப்பை, இந்த உரோமாபுரி, ஸீஸரைப் போன்றவோர் நீச வஸ்துவைத் தன் னொளியினால் விளக்கிக்காட்டவே உதவுமொரு அற்பப் பொருளாவதற்கு! ஓ துயரமே, என்னை எங்கு நீ செலுத்திவிட்டாய்! (17) அடிமைக் குடன்பட்ட ஒருவன்மாட்டு இதனை நான் உரைக்கின்றேனோ, யாதோ (18). ஆயின், இதற்கு நான் உத்தரஞ் சொல்லவேண்டுமே. (19) எனினும் என்! என் கையிலோ கத்தியுளது. வருமிட ரெதுவு மெனக்கொரு பொருளில்லை (20).

**காஸ்க்கா:**—பரிகசித்துக் கோள்சொல்லி இச்சகம் பாடுவான் அல்லாதான் காஸ்க்காவிற்கே உரைக்கின்றாய். இந்தா, என் கைதந்தேன். இந்தக் குறைகளைக் களைவதற்கோர் கட்சியை அமைப்பாயாயின், எவன்தான் எத்துணைத் தூரம் போயினும் அத்துணைத் தூரம் நானுமவ்வென் காலினை வைப்பேன் காண். (21)

**காஸ்ஸியஸ்:**—நன்று, உடன்படிக்கை இது உறுதியாயிற்று. இனி, காஸ்க்கா, கேள். மானமுடன் ஆபத்துடைய முடிவிற்கிடமானவோர் முயற்சியில் என்னுடன் ஈடுபடும்படி பெருமனத்துஉரோமர்கள் சிற்சிலரை யான் முன்னரே இயக்கியிருக்கின்றேன். பாம்பேயின் முன்வாயில் மண்டபத்தின்கண்

(6) உரோமாபுரியைத் தலைநகரமாயுடைய இந்த இட்டாலிதேசத்தைத் தவிர, இவர்களுடைய ஆட்சிக்குட்பட்ட மற்ற நாடுகளுக்கெல்லாம் ஸீஸர் அரசனாகப் பட்டம் சூட்டப்பெறுவான் என்பது கருத்து.

(7) சுரிகை = உடைவாள். ஸீஸர் அரசன் ஆவானாயின் நான் உடனே இந்தக் கத்தியை என் மார்பினுள் செலுத்தித் தற்கொலை புரிந்துகொள்வேன்—என்பது பொருள்.

(8) காஸ்ஸியஸ் தன்னையே படர்க்கையில் பேசிக்கொள்கின்றனன். தற்கொலை என்னும் உபாயம் இருக்கும்வரையில் ஒருவரும் ஒருவர்க்கும் அடங்கிக் கிடக்க வேண்டாம் என்றும், அதனைத் தெய்வங்கள் அளித்திருக்க ஒன்றிற்கும் அஞ்சவேண்டாம் என்றும், விளம்பித் தற்கொலையால் தவிர்த்துக்கொள்ளக்கூடியஇடர்களைப் பின்னர்க் குறிக்கின்றான்.

(9) அதனிற்றான் = தற்கொலையினாற்றான். மிடல் = வலிமை

(9, 10.) பிறர் செய்யும் கொடுமைகளினின்று தம்மைக் காத்துக்கொள்ளும் திறமையில்லாதவர், அந்தத் துன்பங்களை அனுபவிக்கமால் தற்கொலையால் தீர்த்துக்கொள்ள வல்லவர்கள் ஆகின்றார். இதனால் அக் கொடியோர்தம் குரூரத்தை முற்றிலும் செலுத்த முடியாதவர்களாகி இடையே தோற்றுவிடுகின்றனர்.

(11) மனஉறுதியால் தற்கொலைபுரிந்துகொண்டுசிறைக்கூடம் முதலியவைகளிலிருந்து நீர்ந்துவிடலாமன்றோ, என்பது கருத்து.

(12) தன்னையே போக்கிக்கொள்ளும் சக்தி நம் உயிர்களுக்கு எப்பொழுதும் உளது.

(13) ஸீஸர் செய்யும் கொடுமையை உரோமர்களில்ஒவ்வொருவனும் ஒவ்வொரு பாகம் சுமக்கவேண்டியிருக்கின்றது. தற்கொலையால் நான் என்பாகத்தை எப்பொழுது வேண்டுமானாலும் உதறிவிடலாம். மற்றவர்களும் இதனை அறியட்டும்-என்பது பொருள்.

(14) தற்கொலை புரிந்துகொள்ளுங் கருவியாகிய கத்தியைக் குறிக்கின்றான்.

(15) பொருள் தெளிவின்றி இதனைப் பேசுகின்றான் காஸ்ஸியஸ். ஸீஸரென்று பேரை இதுவரையில் சொல்லாதிருந்தவன் வாயில் இப்பொழுது அது வந்துவிடுகின்றது. இதன் பொருள்:—(1)உன்னையும் என்னையும் போல் எல்லோரும் தத்தம் உயிரை மாய்த்துக்கொண்டுவிட்டால், பிறகு தன் கொடுமையைச் செலுத்தற்கு ஆளில்லாக் காரணத்தால் ஸீஸர் கொடியவனாயிருக்க இயலாது என்று தம்மையே இளிவரப் பரிகசித்தல் (2) ஸீஸரைக் கொடியவனாகவே விட்டுவைத்து நீயும் நானும் மற்றவரும் தற்கொலைபுரிந்துகொள்வானேன், எனத் தூண்டுதல்;—இவ்விருகருத்தையும் இது இரட்டுற மொழிந்ததாகலாம்.

(16) ஸீஸரின்மீது குற்றம் சொல்வதிற் பயனில்லை. அவன் என்ன செய்வான் பாவம்; நம்மைப்போல் இப்படிக் கையாலாகாதவர்களைக் கண்டால் யார்தான் துரத்தமாட்டார்—என்பது பொருள்.

(17) உரோமாபுரியைக் கொளுத்தி (அதாவது நம்மை எல்லாம் நாசமாக்கி) அந்த ஒளியில் (அந்த வைபவத்தில்) ஸீஸர் பெருமையுடன் வீற்றிருக்கும்படி ஆயிற்றே—என்பது பொருள்.

(18) துன்பத்தால் மெய்ம்மறந்துதான் இப்படி வெளிப்படையாகச் சொல்லிவிட்டான்போல் அவன் பாசாங்கு செய்கின்றான்.

(19) ஸீஸருக்கு அடிமையாகவே யிருக்க நீ உடன்பட்டவனாவாயாயின், இதனை நீ ஸீஸரிடம் சொல்லிவிடுவாய். அப்பொழுது அவனுக்கு நான் தக்க பதில் சொல்ல வேண்டும்.

(20) அக்கரை என்பது தெலுங்குச்சொல். கையில் கத்தியிருக்க ஆபத்தைப் பற்றித் தனக்கோர் அக்கரை இல்லை என்பது, தற்கொலைக்குத் தான் சித்தமாயிருக்கின்றான் என்ற கருத்தைத் தெரிவிப்பதுடன், ஸீஸரைக் கொன்றுவிடலாம் என்னுங் கருத்தையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது.

(21) நீ ஒரு கட்சி ஏற்படுத்துவாயாயின், நானும் அதிற் சேர்ந்து ஒன்றிற்கும் பின்னிடாமல் எது வேண்டுமெனினும் செய்யச் சித்தமா யிருக்கின்றேன்,—என்பது பொருள்.



இப்பொழுது அவர் எனக்காகக் காத்திருப்பார். (22). பயங்கரமான இவ்விரவு தெருக்களில் கலகலப்பும் போக்குவரவு மில்லை. உதிரமுந் தீயும் உக்கிரமமுமாகி, இப்பூதத்தின் தோற்றமும் நாமிங்குக் கைக்கொண்ட கருமத்தையே ஒத்திருக்கின்றது (23).

**காஸ்க்கா:**—சிறிது ஒதுங்கி நில்; விரைந்தொருவன் இங்கு வருகின்றான்.

**காஸ்ஸியஸ்:**—ஸின்னா அது. நடையினால் அவனை யா னறிவேன். நண்பனே அவன். (24)

[ஸின்னா வருகின்றான்] (25)

ஸின்னா, இவ்வண்ணம் எங்கு நீ விரைகின்றாய்?

**ஸின்னா:**—உன்னைத் தேடிக் காணவே. யார் அது? மெட்டல்லஸ் ஸிம்பரா (26)!

**காஸ்ஸியஸ்:**—இல்லை, காஸ்க்கா அது; நம் முயற்சியில் கலந்திருப்பவன். எனக்குக் காத்திருக்கின்றனரல்லரோ, ஸின்னா?

**ஸின்னா:**—அதற்கு உவக்கின்றேன் (27). எவ்வளவு பயங்கரமாய இரவு இது! அற்புதக் காட்சிகள் கண்ட இருவர் மூவர் எங்களில் இருக்கின்றோம்.

**காஸ்ஸியஸ்:**—எனக்காகக் காத்திருக்க வில்லையா? அதைச் சொல்.

**ஸின்னா:**—ஆம், காத்திருக்கின்றனர். ஓ, காஸ்ஸியஸ் பெருந்தகை ப்ரூடஸைமாத்திரம் நீ நம்முடைய கட்சிக்கு ஈட்டிக்கொள்ள முடியுமாயின்—

**காஸ்ஸியஸ்:**—பொறு பொறு, ஸின்னா (28). இந்தக் காகிதத்தைக் கொண்டுபோய், ப்ரூடஸ் மாத்திரம் பார்க்கும்படி இதை ப்ரீடர் நாற்காலியில் வை (29) இதனை அவன் பலகணிக்குள் போடு; இதனைப் பண்டை ப்ரூடஸின் உருவச்சிலைமீது மெழுக்கினால் ஒட்டிவை (30): இவைகளைச் செய்துவிட்டுப் பாம்பேயின் முன்னணி மண்டபத்திற்கு வா; அங்கு எங்களைக் காண்பாய் (31). டெஸ்ஸியஸ் ப்ரூடஸும், (32) ட்ரேபோனியஸும் அங்கு இருக்கின்றனரோ?

**ஸின்னா:**—மெட்டல்லஸ் ஸிம்பர் தவிர மற்றெல்லாரும்; அவனும் உன்னைத் தேடிக்கொண்டு உன் வீட்டிற்குப் போயிருக்கின்றான். நீ விதித்தபடி இக் காகிதங்களைச் சேர்க்குமாறு நான் விரைந்திடுவேன்.

**காஸ்ஸியஸ்:**—அதனைச் செய்துவிட்டுப் பாம்பேயின் மண்டபத்திற்கு வந்துசேர்.

[ஸின்னா போகின்றான்]

வா, காஸ்க்கா, நீயும் நானும் பொழுதுவிடியுமுன் ப்ரூடஸை அவன் வீட்டிற் பார்ப்போம். முன்னரே அவன் முக்கால்பாகம் நம்முடையதாகிவிட்டது. அடுத்தமுறை சந்திக்கும்போது, அவன் முழுவதும் இணங்கித் தன்னையே நமக்கு ஈந்துவிடுவான் (33).

**காஸ்க்கா:**—சனங்களி னிதயமெல்லாம் அவன் சிறப்புடன் வீற்றிருக்கின்றான். நம்மிற் குற்றம்போல் தோன்று மொன்றை அவன் முகம் மிகச் சிறந்த இரஸவாதம்போல், தருமமும் தகவுமாய் மாற்றிவிடும். (34)

**காஸ்ஸியஸ்:**—அவனையும், அவன் தகுதியையும், நமக்கவன் இன்றிமையாதிருப்பதையும் நேராக நீ மதித்துளாய். நள்ளிரவும் கழிந்துவிட்டது, நாம் போவோம். புலருமுன் அவனைத் துயிலெழுப்பி நிச்சயம் செய்துகொள்வோம். (35)

[போகின்றனர்]

(22) பாம்பே, கட்டிய மாளிகையின் முன்னணி மண்டபம். அங்குப் பாம்பேயின் உருவச்சிலை ஒன்று இருந்தது. சதியாலோசனைக்குத் தகுந்தவோர் இரகசிய இடமாகக் காஸ்ஸியஸ் முதலானோர் அவ்விடத்தை உபயோகித்துக்கொண்டனர்.

(23) பூதம் என்பது இங்கு, ஆகாயம் காற்று முதலிய பூதங்களைக் குறிக்கின்றது. இதனால், இவர் கைக்கொண்ட கருமத்தில் கொலை அழிவு கலகம் முதலியன நிகழ வேண்டுமென்பதைத் தெரிவிக்கிறான்.

(24) கூரிய புத்தியுடையவன் காஸ்ஸியஸ்; முன் காஸ்க்காவைக் குரலால் தெரிந்து கொண்டதுபோல், ஸின்னாவை அவன் நடையினால் தெரிந்துகொள்கின்றான். அவன் நண்பன் என்பது, ஸின்னாவும் நம்முடைய இரகசிய காரியத்திற் கிணங்கினவன் என்னும் பொருளது.

(25) ஸின்னா என்பவனும் உரோம்நகரப் பெருமக்களில் ஒருவன்.

(26) மெட்டல்லஸ் ஸிம்பர், என்பவனும் அன்னவர்களில் ஒருவன்.

(27) காஸ்க்காவும் தம் கட்சியில் சேர்ந்ததற்கு ஸின்னா உவக்கின்றான்.

(28) நான் ப்ரூடஸை நம் பக்கம் சேர்த்துக்கொண்டுவிடுவேன், நீ தளராதே என்பது கருத்து.

(29) ப்ரீடர் உட்காரும் நாற்காலி, ப்ரீடர் என்பவன் பெரிய உத்தியோகஸ்தன். அவ்வுத்தியோகம் கான்ஸலுக்கு அடுத்தபடியானது. நீயாதிபதிப் பதவி என்னலாம். இந்த உத்தியோகத்தை ஸீஸர் ப்ரூடஸிற்குக் கொடுத்திருந்தான். ப்ரூடஸ் மாத்திரம் பார்க்கும்படி வை, என்பது, மற்றவர் பார்த்தெடுக்காதபடி வை என்றேனும், அல்லது ப்ரூடஸ் பார்க்கும்படி மாத்திரம் தக்க இடத்தில் வை என்றேனும் இருவிதத்திலும் பொருள்படலாம்.

(30) டார்க்வின் வமிச அரசர்களை முன் உரோமிலிருந்துஅடித்துத் துரத்திய ப்ரூடஸின் உருவச்சிலையைக் குறிக்கின்றான். இவன் வரலாற்றை, கலாநிலயம் 51 வது பக்கத்திலுள்ள 19 வது குறிப்பிற் காண்க.

(31) ப்ரூடஸின் பெருமையைக் குறித்து, அவனை ஸீஸருக்கு விரோதமாக எழுப்புங் கருத்துடைய சூழ்ச்சிக் கடிதங்கள் இவை:—73 வது பக்கத்திலுள்ள 37 வது குறிப்பைக் காண்க.

(32) டெஸ்ஸியஸ் ப்ரூடஸ் வேறு, மார்க்கஸ் ப்ரூடஸ் வேறு. இதுகாறும் இங்கு நிகழ்ந்தவன் மார்க்கஸ் ப்ரூடஸ். ட்ரெபோனியஸ் என்பவனும் உரோமப் பெருமக்களில் ஒருவன்.

(33) முன்னரே ப்ரூடஸ் நம்முடைய கட்சியைச் சேர்வதற்குப் பெரும்பாலும் சம்மதித் திருக்கின்றான். இன்னொருமுறை நாம் அவனைச் சந்தித்துப் பேசுவோமாயின் முழுமனத்தோடு சேர்ந்து வேண்டியவைகளை நம் கருத்தின்படி செய்யத்தலைப்படுவான்,—என்பது பொருள்.

(34) ஜனங்களெல்லோராலும் நன்கு மதிக்கப்படுபவன் ப்ரூடஸ் ஆதலின், அவன் இதற்கு முகந்தருவானாயின் (அதாவது சம்மதித்துக் கலந்துகொள்வானாயின்), நாம் மாத்திரம் செய்தால் குற்றம்போல் தோன்று மிதுவே, தருமமாகவும் பெருமையுடைய செய்கையாகவும் ஜனங்களால் பாராட்டப் பெறும்—என்பது பொருள்.

(35) முக்கால் பங்கு முன்னரே உடன்பட்டிருக்கிற ப்ரூடஸை எழுப்பி முற்றிலும் அவன் நமக்கு இணங்கும்படி உடனே நாம் நிச்சயம் பண்ணிக்கொள்ள வேண்டுமாகையால் தாமதமின்றிப் போவோம்-என்பது பொருள்.

[முதலங்கம் முடிகின்றது]

# தினகர வெண்பா

[97-வது பக்கத் தொடர்ச்சி]

27 கல்விக் கடல்கடந்து கற்றறிவு பேசுமவர்
செல்விக்கப் போற்றுந் தினகரா—சொல்லில்
வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

[2 கரைகடந்து. 5 செல்விகை.] எண்-சீர்களின் எண்.

அதி. 25. அருளுடைமை

28 வாடினர்க்குச் சற்று மருள்வதில்லா மாநிதியந்
தேடினக்கா லென்னுந் தினகரா—நாடில்
அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்
பூரியார் கண்ணு முள. [செல்வம்

[3 மருள்வதில்லார். 4 காசு பணந். 6 லென்ன.]

அதி. 26. புலால்மறுத்தல்

29 மன்னுயிரைத் தாமாய்வதையாமற் கொண்டுபுலால்
தின்னலா மென்பார் தினகரா—வென்றுந்
தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின்யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்.

[3 வரையாமற். 4 கொன்றுபுலால்.]

அதி. 27. தவம்

30 தாமனத்தி லன்றிநினைந் தாப்போ லிருந்திடத்தே
சீமைபெற்றாய் கோவைத் தினகரா-யாமெவர்க்கும்
வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

[5 சீர்மைபெற்றாய்.]

அதி. 28. கூடாவொழுக்கம்

31 ஒப்போ டொழுகா ருளந்திறந்து பார்க்கவது
செப்போ சிமிழோ தினகரா—இப்பார்
கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்.

[8 இப்பாற். 12 கென்ன.]

அதி. 29. கள்ளாமை

32 கள்ளர்க்குற் றுருண்டோகற்றோர்தமிழையெல்லாந்
தெள்ளிப் புணையுந் தினகரா—வுள்ளத்
தளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

[1 கள்ளற்குற். 3 கற்றாய்.]

அதி. 30. வாய்மை

33 விப்பிரர்தெய் வங்குரவர் வேண்டுநிலைக் காயொரு
செப்பினுநன்றாகுந்தினகரா-ஒப்புரைகேள் [பொய்
பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

[4 காயொருவர். 5 செப்பிலுப. 6 தேசந்.]

அதி. 31. வெகுளாமை

34 ஆரா ருறவாகா ரார்வசமா கார்சினத்தைச்
சேரா திருக்கிற் றினகரா—நேராக
வுள்ளிய வெல்லா முடனெய்து முள்ளத்தா
னுள்ளான் வெகுளி யெனின்.

அதி. 32. இன்னாசெய்யாமை

35 குற்றமிகச் செய்தாரைக்கொல்லாமற்கொல்லவொ
சிற்றறிவா ருண்டே தினகரா—வுற்றதுகேள் [ரு
இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

[2 செய்வாரைக். 8 மற்றதுகேள்.]

அதி. 33. கொல்லாமை

36 எய்துசிவ பூசை யிருக்கப் பசுப்படுத்துச்
செய்துபல னென்ன தினகரா—பெய்தலினி
நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை.

[8 பெய்ததழலின்.]

அதி. 34. நிலையாமை

37 பூசிமுடித் துண்டுடுத்துப்பொன்னுளபோதேகொடு
தேசுபெற வேணுந் தினகரா—பேசுங்காற் [த்துத்
கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

[6 வெண்ணுந். 8 காசினியிற்.]

அதி. 35. துறவு

38 ஆரை வெறுப்பா ராரநரை வந்தபின்பு
தீர வெறுப்பார் தினகரா—பேருலை
வேண்டினுண் டாகத் துறக்கத் துறந்தபின்
ஈண்டியற் பால பல.

* [1 ஆரே ?. 2 வெறுப்பவ ?]

அதி. 36. மெய்யுணர்தல்

39 சைவநிலை நின்றுஞ் சமையபே தங்களிலே
தெய்வமிக மூதே தினகரா—வெவ்வுரையில்
எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

அதி. 37. அவாவறுத்தல்

40 பேதையர்க்கு மோகம் பிறப்பியா தேவிடுமோ
சீதரனே கோவைத் தினகரா—காதல்
அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

அதி. 38. ஊழ்

41 ஒன்று மறியா ருலகாள்வா ரொள்ளியர்கள்
சென்றிரப்பார் கோவைத் தினகரா—வன்றே
இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

[3 ருலகாள்வ. 6 என்றே.]

அறத்துப்பால் முற்றும்.

—

* வினக்குறியிட்டன உத்தேச பாடங்கள்.

---



# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்—2. சரபங்கர் பிறப்பு நீங்கு படலம்.

[92-வது பக்கத் தொடர்ச்சி]

இருமுறை யிந்திர னிரியல் போயினன்.

மனிதரைத் தனித்தனி இனங்களாகப் பிரிக்கும் நாகரிகநிலைகளுக்கிடையே உள்ளவேற்றுமையை அவரவர் உணவு உடை மணம் அனையவைகளைக்கொண்டு ஆராய்வதின்றி, உள்ளத் துறைந்து, வாழ்க்கைக்கோர் ஊக்கம் ஊட்டுகின்ற நோக்கத்தைச் சிந்திக்குமளவில், வடமொழி ஆரியர்க்குந் தென்மொழித் தமிழர்க்கும் உள்ளவொருஉண்மைபாயவேற்றுமை விண்டெழுந்து விளங்கவருகின்றது. விலைமதிப்பரிய கலைப்பொருள்களேநாகரிகத்தின் நிலைக்களன்கள். அக்கலைகளிலும் ஓவியமும்சிற்பமும் நாகரிகத்தின் தோற்றங்களைக் காட்டுந் தன்மையன. இசைவாணர் நாகரிகத்தின் நயத்தினைப் பயன்படுத்தும்பண்பினர். ஒவ்வோர் திறத்தில் அவ்வக்கலை நாகரிக நடையினுக் கருமையாயது. எனினும், நாகரிகத்தின் நுட்பங்களை முகந்துகொண்டிருப்பன காவியக்கலைகளே. நாகரிகத்தின் நோக்கங்களை நினைத்தும் நிகழ்த்தியும் நடக்கின்ற செம்மையால், கலங்கலில் காட்சிவாய்ந்த மேலோர்தம் புலமைமிக்க காவியங்கள் யாதினும் உயர்ந்த செல்வங்களாகின்றன. ஓவியம் சிற்ப மனையவைகளை நாகரிகத்தின் அவயவங்கள் என்னலாம். தகைசால்இசைக்கலை நாகரிகத்தின்உணர்வுபோலாம். உணர்வினோடு நாகரிகத்தின் உயிருமாவது காவியக்கலை. காவியக்கலைஞர், நாகரிகத்தின் இடையிருந்தும் ஊடுருவியும் வாழ்க்கையை இயக்குகின்ற நோக்கங்களை நுனித்துணர்ந்து, அன்னதற்கே ஆதாரமாக அனைத்தையும் திருத்தி, இது சிந்தனையின் கற்பனையோ சித்திரத்தின் அற்புதமோ, மற்று இயற்கை நிலை இருந்தவண்ணம் இதுவேதானோ என் றெம்மனோர் பிரித்தறியஇயலாவகை அம்மூன்றையும் ஒக்கக் கலந்து தம் இன்சொற் றேனுடன் இனிது ஊட்டி அந்நாகரிகத்தை நந்தாமல் வளர்த்து ஓர் உவகையின் உருவமாக்கி, அதனையேயாவரும் கண்கொண்டு களிக்கும் காட்சியாகவும், மனங்கொண்டு பாவுங் கருத்தாகவும், கைகொண் டியற்றும் செயலாகவும் நிகழ்த்தித் தருகின்ற நீர்மையாற் பெரியவராகின்றார். இத்தகைய கவிவரர் உதவிகொண்டு கருதுங்கால், ஆரியர் தமிழர் என்னும் இவ்விருதிறத்தவர்தம் நாகரிகங்கள், மூலமாய ஓர்வேற்றுமையால் திசைவிலகித்தாம் வழிநடக்க வேண்டும் என்னும் வாய்மை மெல்லமெல்லத் தெளிவடைந்து திரளத் தலைப்படுகின்றது.

இதன்படி, வடமொழி வித்தகர்க்கும்தென்மொழிச் செல்வர்க்கும் இடையேகிடக்கும் அடிப்படையான நாகரிகவேற்றுமையின் ஒரு தோற்றத்தினை முன், இம்மைக்குரிய அரசியல்திறத்தைச்சார்ந்து விரிவுறச் செப்ப நேர்ந்துளோம். அதனிடையில், நம் ஆராய்ச்சியில் அமையும் வண்ணம், அறம் என்பதனை முதலறம் சார்பறம் என இருவகைத்தாக்கி, சார்பறம் சிறக்க ஆரியர்களும் முதலறம் சிறக்கத் தமிழர்களும் வேறுவேறு விவகரித்த விதங்களை விளங்கக் காணலாம். (கலாநிலயம், 3-வது வால்யூம், முதலாறு மாதத்து இதழ்கள்). அங்கு, வேதவியாதர்முதல் சாணக்கியர் ஈறாக உள்ளவர்தாம் ஒருதிற முரைக்கக் கம்பர்தாம், திருவள்ளுவர் வழியினின்றுங்கூட விலகி, மறுபுறம் உரைத்து, அரசியல் முறைமையையும் அவ்வரசியலால் காக்கப்பெறுகின்ற மாநுடவாழ்க்கையின்நிலையையும் ஆராயுமளவில் அவை தாமே தமக்குத் தவமும் தவத்தின்பயனும் ஆகின்ற நீர்மையை அரிதின் உணர்த்தினார். இங்குச் சரபங்கர் சரித்திரத்தில் மறுமையின் மாண்பு பூண்ட வேற்றுமையைக் காணவல்லவராகின்றோம். இவ்வேற்றுமையைக் காட்டுதற்கு இந்திரனே வந்து இனிது உதவுகின்றான்.

"நீ இயற்றிய இருந்தவத்தின் பயனைப் பிரம்மன் தன் நல்லுலகம் வந்து நனி துய்க்கக் கடவாய்" என்று வந்தழைத்த வாசவனை, "அஃதே ஆகுக" என மனமுவந்து சரபங்கர் வான்மீகத்தில் பின்தொடர, மற்றித் தமிழ்நூலிலோ, பெற்றும் பெறுகில்லதொர் பெற்றியதாம் அந்நெறியை யான் நண்ணுவேனல்லேன், இமையோர்தலைவ நீவந்த வழிநோக்கி மீள்க"; எனப் போக்கிவிட்டனன். ஆகலின் இவ்வகை, சரபங்கமுனிவனால் கைவிதிர்த் தோச்சப்பெறவே, பெரியதோர் நன்கொடை அம் மாதவச் செல்வனுக்குப் புரியத்தான் போந்திருந்தானெனக் கொண்டுள ஏமாப்பெல்லாமழிந்து பரிபவம் தலையில்தாங்கி மீண்டனன் புரந்தரன். தலைகவிழ்ந் திவ்வண மகலவேண்டித் தமிழ் நூலினால் பொன்னுலகாண்ட இந்திரனுக்கு நேர்ந்த இதுமுதல் முறையன்று. கம்பருக்குமுன்னரே, சீத்தலைச்சாத்தனார், புரந்தரன் புறந்தந் திடைதர வேறோர் புலைமகனைத் தம் "மணிமேகலை" யினுள் கற்பித்திருக்கின்றனர். வாரணசியில் வைகிய ஆரணஉவாத்தி அபஞ்சிகன் என்பான் மனைவி சாலி மறைவிற் பெற்று, பரிவுடைய பசுவொன்று புறங்காக்க இருந்து பிறகு, வயனங்காட்டு மறையோம்பாளன் இளம்பூதியின்பால் வளர்ந்துவந்த மைந்தன் ஆபுத்திரனை அறியாதாரில்லை. பின்னர் அந்தணர்செய்யும் கொலைசூழ் வேள்விக் கிடையூறிழைத்த இம்மைந்தனை அவர்ஊர்விட்டோட்டிவிடவே, இரந்துயிர்பிழைக்க வெண்ணிய இவன் பிச்சைபுக்கபோது ம்ஆ கவர் கள்வன் என யாவரும் இகழ்ந்து அந்தணர் உறைதரு கிராமம் எங்கணும் கடிஞையிற் கல்லிட, இவ்வாபுத்திரன் அவ்வந்தணர்ஊர் மண்ணினைத் தன் காலின்று உதறிவிட்டு மதுரையம்பதிசென்று சேர்ந்தான். அங்கு,

சிந்தா விளக்கின் செழுங்கலை நியமத்
தந்தின் முன்றி லம்பலப் பீடிகைத்
தங்கினன் வதிந்தத் தக்கணப் பேரூர்
ஐயக் கடிஞை கையி னேந்தி
மையறு சிறப்பின் மனைதொறு மறுகிக்
காணார் கேளார் கான்முடப் பட்டோர்
பேணுந ரில்லோர் பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருகவென் றிசைத்துட னூட்டி
உண்டொழி மிச்சிலுண் டோடுதலை படுத்துக்
கண்படை கொள்ளுங் காவலன்,

ஆயினன். இப்படி இவன் பிச்சையெடுத்ததைப் பிறரொடு பகிர்ந்து மிச்சிலுண்டு வாழும்நாளில் ஒருநாள் நள்ளிரவில், வழிவருந்திய சிலர் வந்து பசிக்குணவு

கேட்கவும், அவர்க் களிக்கும் வகையறியாது திகைக்கையில் சிந்தாதேவி அவன்முன் தோன்றி,

ஏடா வழிய லெழுந்திது கொள்ளாய்
நாடுவறங் கூரினுமிவ் வோடுவறங் கூராது
வாங்குநர் கையகம் வருந்துத லல்லது
தான்தொலை வில்லாத் தகைமைய தென்றே
தன்கைப் பாத்திர மவன்கைக் கொடுத்து

அகன்றபின், அவ்வோடுகொண்டு அவர் பசிதீர்த்துப் பிறகு அந்நாள்தொட்டு அவன்,

வாங்குநை வருந்த மன்னுயி ரோம்பலின்
மக்களு மாவு மாஞ்சேர் பறவையுந்
தொக்குட னீண்டிச் சூழ்ந்தன விடாஅ
பழுமரத் தீண்டிய பறவையி னெழூஉம்
இழுமென் சும்மை யிடையின் றொலிப்ப

வாழ்ந்து வந்தனன். மாயிரு ஞாலத்து மன்னுயிரோம்பும் ஆருயிர் முதல்வனும் இவ்வாபுத்திரன்தன் ஈகைத்திறத்தினைத் தெரிந்துகொண்ட இந்திரன், ஓர் வயோதிக மறையோன் வேடம்பூண்டு அவன்முன் தோன்றி,

இந்திரன் வந்தேன் யாது நின்கருத்
துன்பெருந் தானத் துறுபயன் கொள்க

எனக் கூறினன். அப்பொழுது அருகிருந்த, ஆபுத்திரன் முகத்தினைநோக்கும் பேறு யாரேபெற்றிருந்தார்; இம்மானுடப் பெருந்தகை,

வெள்ளை மகன்போல் விலவிற நக்கீங்
கெள்ளினன் போமென் றெடுத்துரை செய்வோன்
ஈண்டுச் செய்வினை யாண்டு நுகர்ந் திருத்தல்
காண்டகு சிறப்பினுங் கடவுள ரல்ல
தறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்
நற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரு மில்லாத் தேவர்நன் னாட்டுக்
கிறைவ னாகிய பெருவிறல் வேந்தே
வருந்தி வந்தோ ரரும்பசி களைந்தவர்
திருந்துமுகங் காட்டுமென் றெய்வக் கடிஞை
உண்டி கொல்லோ உடுப்பன கொல்லோ
பெண்டிர் கொல்லோ பேணுநர் கொல்லோ
யாவையீங் களிப்பன தேவர்கோன்

எனப்பரிகசித்து அனுப்பிவிட்டான். இந்திரனுக்குற்ற இந்த அவமானம், பிறகு வான்மீகர் நூலினுள் வந்த சரபங்கமுனிவனுக்கு அவன் தவத்தின் பயனை அளித்தவுடன் அவன் ஏற்றுக்கொண்டதனல் ஒருவாறுதீர்ந்திருக்கலாம். பூனைக்கும் இந்திரனுக்கும் எஞ்ஞான்றும் ஓர்தொடர்பு இருந்தவண்ணம் அகலிகையின்பால்நண்ணியபோது தெரிந்தது. உருசிகண்ட பூனையாய், மீண்டும் இப்பொழுது, கம்பரது தமிழ்க்கையில் வளர்ந்தவச் சரபங்கனிடத்தும் வரத்துணிந்தனன். முதலில் சூடுண்டபூனையா யிருந்ததுபோகப் பிறகு ருசிகண்டபூனையாய்வந்ததன்பயன் அவனுக்குக் கிட்டிவிட்டது. ஈண்டுச்செய்வினை ஆண்டு நுகர்ந்திருத்தல் அமாருக்கு அடுக்குமேனும் மண்ணினிற் சிறந்துவாழும் மன்பதைத் தொகுதியோர்க்கு அது வேண்டாவென்ன, முன் ஆபுத்திரன் அறைந்ததேபோல் மீண்டுமிச் சரபங்கன் இங்கு மறுத்துவிட்டான். அறம்பொருளின்பம் வீடு எனென்னுமப் பயன்களை முறையே அடைவதற்கமைந்துளது இப்பிறவி என்னுங்கொள்கை வடமொழி நாகரிகத்திற் கடிப்படையா யிருக்கின்றது. தனித்தமிழ் நாகரிகத்தில் இம்முறைமையேனும் நோக்கமேனும் இல்லை. ஆபுத்திரன் ஈந்தானெனில் ஈந்தான் — அவ்வளவே; அதனலேனும் அதன்மேலேனும் அடைவதற்கொன்றும் கருதலறியான். அது இயலாததோர் அரியநிலை நேர்ந்தபோது, "மன்னுயிரோம்பும் இம்மாபெரும் பாத்திரம் என்னுயிர் ஓம்புதல் யானே பொறேன்" என்று கடிஞையை எறிந்துவிட்டுத் தானே பசியினல் மாய்ந்துபோனன். பிறவியின் பயன் பிறவியே, வேறில்லை; வாழ்க்கையின் பயன் வாழ்வாங்கு வாழ்தற்கு இயைவதே. ஆபுத்திரனது நாகரிகம் அவனுக்கு வேறொன்றுங் கற்பித்திலது. வீடு தேடினன்போல் மேல்பார்வைக்குத் தோன்றுகின்றதேனும் கம்பர் நூலினுள்வந்த சரபங்கன் சரித்திரமும் அதனையே சாற்றுகின்றது. "பூதமெலாம் உகினும் மறுகாநெறி" தான் எய்தவேண்டும் என்று பெருமிதம் பெருக இயம்பிய போது, நிரந்தரம் தான் இருத்தலொன்றே கருத்தாகக் கொண்டிருத்தலைக் காட்டினனல்லது மறுமைப் பயனை மனத்துட் கொண்டவனல்லன். வடநூலின் வழிபற்றி வந்தானேனும் கம்பரது செந்தமிழினில் மறுபிறப்பெடுத்த தன்மையால் இவன் சரித்திரம் இவ்வாறு மாற நேர்ந்தது.

இவ்விருவகை நாகரிகத்தில் திருவள்ளுவரது உட்கோள் எத்திறத்ததென்று துணிந்தியம்புதல் எளியதன்று. பற்பல விடங்களில் இம்மை மறுமை என்னும் இருவகைப் பயன்களையும் தொடர்புபடுத்தியே அவர் அறத்துப்பாலிலும் கூறக் காண்கின்றோம். வீட்டுப்பாலை விட்டுளரேனும், அறம் பொருள் இன்பம் என்ற பாகுபாடுதானே, ஆரியர் நாகரிகம் அவருடைய கருத்தில் எத்துணைக் கலந்திருக்கின்றதென்பதை நன்கு காட்டுகின்றது. ஆயினும் தனித்தமிழ் நாகரிகம் அவ்வித்தகரைப் பெரிதும் ஆளாக்கிக்கொள்கின்றதென்பதற்கையமில்லை. "அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்று வாழ்க்கையையே வாழ்க்கையின் பயனாகக் கூறியவர் அதே அதிகாரத்தை, "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்" என்றோர் பயனைச் சொல்லாமற் சொல்லி முடிக்கின்றார். எனினும், "நல்லா றெனினுங் கொளல்தீது, மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று" என்றவிடத்துத் தமிழ் நாகரிகத்தைத் தழுவுகின்றார் என்று கொள்ளல் வேண்டும். அவ்விடத்தும், " இல்லெனினும் " என்பதிலுள்ள சிறப்பும்மை ஒருவகையில் அதன் வேகத்தைக் குறைத்துவிடுகின்றது. இக் கொள்கையைத் தொடர்ந்து திருக்குறள் முற்றிலும் ஆராயுங் கருத்து ஈண்டில்லையாதலின், இதன்மேல் இங்கு விரித்துரைத்தற்குஇடமில்லை. அந்நூல் முழுவதையும் இக்கண்கள் கொண்டு காணுங்கால், முன் சார்பற முதலறங்களின் திறத்தில் தெரியநின்றதுபோலவே, இதனிலும் இவ்விரு பெரும் நாகரிகங்களின் நிலைமையும் நோக்கமும் விரவிய சிந்தையராய் நம்பெருந்தகை வள்ளுவநாயனர் பேசினரென்னும் நுண்மை புலப்படும். உண்மையில் இதுவும் அவர் பிறப்பிற் குரியதே. பகவன் என்னும் ஆரிய அந்தணனுக்கும் ஆதி என்னும் புலைச்சிக்கும் பிறந்தார் என்ற கதைக்கிணங்க, தந்தையின் நாகரிகத்தில் ஒரு கூறும் தாயின் நாகரிகத்தில் ஒரு கூறுங்கொண்டு இரண்டையும் இனிதே உடன்படுத்தி உரைக்க முயன்ற பெருந்தகையாளர் ஆயினரென் றியம்பலாம். "அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே யுலகு" என்ற வாழ்த்து, கடவுளையோ மற்றுத் தன்னையீன்ற அன்னையும் பிதாவையும் தானே வழுத்த வந்துளதென வினவினும் பிழையில்லை.



# பெண்பாலார்

**[Arthur Schopenheaur on WOMEN]**

[93-வது பக்கத் தொடர்ச்சி]

[இப்பாகம் நேர் மொழிபெயர்ப்பன்று; முதனூல் கருத்தைத் தழுவி எழுதப்பெற்றுளது].

"சந்ததியின் பெருக்கிற்கென்றேபெண்பாலர் அமைந்திருக்கின்றபடியினல், சந்ததியைப் புரக்கும் கருமத்தில் கருத்துடையராய், கொழுநனிடம் பெரிதும் பராமுகமா யிருந்துவிடுகின்றனர். இது பெண்ணின இயற்கையாகும். இவ்வியற்கையே அவர்களது பொறுப்பின்மைக்கும் காரணமாகின்றது. எனவே இவரது தன்மைக்கும் ஆடவர் தன்மைக்கும் வேறுபாடு ஏற்படுகின்றது. இல்லறவாழ்க்கையில் கொழுநனுக்கும் மனைவிக்கும் இடையே ஏற்படுகின்ற மனவமைதியின்மைக்குக்காரணம் முரணுடைய இவ்விருதன்மையின்வேறுபாடே. இருபாலார்க்கும் வேறுவேறாக அமைந்துள இத்தன்மைகள் உலகவிவகாரத்தில் இயங்கும்வழியும் வேறு. ஆடவர் இருவர் தம்முள்பழகுகையில் அவர்களுக்கிடையில் புறக்கணிப்பு என்னும்தன்மைதோன்றினல்தோன்றலாமேயொழியப் பகை ஏற்படுவதுகிடையாது. பெண்களுக்கு இடையோவெனில் பகைமைதான் நடமாடும். வியாபார விவகாரங்களில் போட்டியினல் பொறாமையும் பகையும் ஆடவர்களுக்கிடையில் ஏற்படலாமெனினும், அத் தொழில்சம்பந்தப்பட்டவரைதான் அது இருக்கும். பெண்களுக்கோ பொறாமை அடைவதும் பகைகொள்ளுவதுமே கருமமாய்விடுகின்றது. ஒரு பெண் மற்றொரு பெண்ணைச் சந்திக்குங்காலையில் ஒருவரோடொருவர் கபடமிலாதும் நெருங்கியும் பழகுவது கிடையாது. ஆடவனே நெருங்கியும் கரவிலாதும் பழகுவான். தன்னைக்காட்டிலும் குறைந்த அந்தஸ்திலுள்ளவனிடத்தும் அவன் கருணையும் நட்பும்தந்து பேசுவான். பெண்ணே தன்னிலும் தாழ்ந்த அந்தஸ்திலுள்ள மற்றொரு பெண்ணைச் சந்திக்க நேரிடுமானல், கர்வத்தோடு எதிரிருப்பாளை அவமதித்துத்தான் பேசுவாள். அந்தஸ்தின்பால் பெண்களுக்குப் பற்று அதிகம்.

காமவிழைவினல் மருளடைந்த மனதையுடையவனே, உருவக்குறைவும் சிறுத்த தோள்களும் அகன்றதிடையும், குறுகிய கால்களையுமுடைய பெண்பாலாரை எழிற்பாலார் (Fair sex) என்று பெயர் கொடுத்தழைக்க இசைவான். இக்காமவிச்சையிற்றான் பெண்பாலர் அழகைப் பெறுகின்றார். இல்லையேல் பாலில் தாழ்வுடைய பெண்பாலார்க்கு அழகென்பது இல்லை. அவர்களை அழகுடையார் என்று சொல்வதினும் அழகு என்னும் உணர்வே இல்லாதார் என்று அவர்களை அழைப்பதுபொருத்தமுடையதாகும். சங்கீதம் சிற்பம்காவியம் என்னும் சீரியகலைகளில் கருத்துடைய மனதை அவர்கள் பெறவில்லை. கலையுணர்வுடையார்போல் அவர்கள் நடிப்பாரேல், அது ஆடவரை மகிழ்விக்கச் செய்யும் முயற்சியால் செய்கின்ற பாசாங்கே யாகும். அவர் காட்டும் கலையுணர்வெல்லாம் சிரிப்பதற்கானவொன்றே. தனக்குப் புறத்திலே நாட்டம்வைத்து (Objective Interest) விவகரித்தலுக்குப் பெண்மையில் இடமில்லை. விஷய அறிவினலோ அல்லது ஒன்றினை வென்று ஆள்படுத்திக்கொள்ளும் திறமையினலோ ஆடவன் சிறக்கின்றான். இவ்விரு திறமையும் பெண்கள்பால் இல்லை. ஆடவன் மூலமாகவே எதையும் அவர் அடைய வேண்டியிருக்கின்றது. எனவே பெண்களுக்கு, ஆடவனை வெற்றிகொள்ள வேண்டிய அவசியம் அதிகமிருக்கின்றது. இந்தவொரு கருமத்திலேயே அவர் ஈடுபடுகின்றனர். எனவே பெண்கள் கலையின்பால் காட்டும் ஆர்வமெல்லாம் ஆடவனை வெற்றிகொண்டு தமது கோரிக்கைகளை எய்தப்பெற முயலும் நாடகமே. ஆதலினாற்றான் ரோஸோ (Rousseau) என்னும் பிரஞ்சு வித்தகர்:—

"பொதுவாகப் பெண்களுக்குக் கலைகளில் ஆதரம் கிடையவே கிடையாது. எதைப்பற்றிய முழுமையான அறிவும் அவர்களுக்கில்லை. அவர்களிடம் மேதைத்தனமும் (Genius) இல்லை."

என்று கூறியுள்ளார். வெளித்தோற்றத்திற் கப்பால் நோக்காதவர்கள் இப்பெண்தன்மையை அறியாதுபோவது வியப்பன்று. ஒரு பாட்டுக்கச்சேரியோ அல்லது நாடகமோ ஆகட்டும், அங்குச் செல்லும் பெண்கள் எவ்வளவு கவனத்தோடு இருக்கின்றனர் என்பதை உற்று நோக்குவார், பெண்மையின் பேதைமைத் தன்மையைத் தெரிந்துகொள்வார். குழந்தைகளைப்போல் அவ்விடங்களிலும் கலகலவென்று பேசிக்கொண்டேதா னிருப்பார். சுவையும் நயமும் அதிகமாகவுள்ள விடங்கள் நடக்கின்ற சமயந்தான் அவர்கள் அதிகம் பேசிக்கொண்டிருக்கக் காணலாம். கிரேக்கர்கள், நாடகங்களுக்குப்போகும் உரிமையைப் பெண்களுக்குத்தரவில்லை என்று சொல்வது உண்டு. அது மெய்யாயின், அவர்களது இக்காரியம் போற்றுதற்குரியதே. பெண்கள் இல்லாதுபோனற்றான் பாட்டுக்கச்சேரியில் பாட்டைப் பிறர் கேட்கவியலும். 'கோயிலிற்குள் பெண்கள் பேசாதிருக்கட்டும்' என்ற ஒரு சொல் உண்டு. அதற்கும் பதிலாக, நாடகசாலைகளில் பேசாதிருக்கட்டும் என்று சொல்வது பொருத்தமுடையதாகும். அவர்களால் எதனிலும்மனதைச்செலுத்தியிருக்கமுடியாது.

சிற்பத்துறையிலாகட்டும், சங்கீதக் கலையிலாகட்டும், காவியக் கலையிலாகட்டும் பெண்கள் பெருமையும் புதுமையும் உடையதான எதையும் இதுவரையில் இயற்றினவர்களல்லர். அப்படிச் செய்யும் மன ஆற்றல் அவர்களுக்கில்லை. அவர்களிடமிருந்து விழுப்பமுடைய வொன்றையும் எதிர்பார்க்க முடியாது.

## கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**—அறியாமை வேண்டப்படும் 4. மெநலச்சோதனை 8. சிசையர்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விரும்பினேன் வெட்கமில்லை. கல்லாதார்களை கல்லவர்கள் 5. காணத்தால் கைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேத வியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுள்ளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள்ள, 'தசரதன் குறையும் கைகேயி நிறையும்' என்னும் நூலிற்கூறிய பொருள்கள் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்னம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி. நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**— K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

### 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5 மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்திபாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்னம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தப், முத்தி முதலியவைகளின் உண்மை

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R. B. Sheridan எழுதிய நாடக மொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் காவல்.

**களவியற் காரிகை:**—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொரு ளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— டைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எமெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.



## வர்த்தமானம்

கும்பகோணம் முனிசிபாலிட்டியார் கும்பகோண நகரத்திற்கு மின்சாரவசதி ஏற்படுத்த முயன்ற முயற்சி முற்றுப்பெற்றது. இம்மாதம் 10 தேதியன்று சென்னை கவர்னர், மின்சார இயந்திரச் சாலையைத் திறந்து வைத்தார் என்று கும்பகோணம்செய்தி கூறுகின்றது.

***

ஸ்ரீரங்கம் முனிசிபாலிட்டியார் குழாய் மூலம் சுத்த ஜலம்கிடைக்கும்படிசெய்யும் ஏற்பாட்டில் சென்றசில வாண்டுகளாக ஈடுபட்டிருந்தனர். அது இப்பொழுது முற்றுப்பெற்று, பிப்பிரவரி மாதம் 4-ந் தேதி யன்று திருச்சி கலக்டர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. என்று திருச்சிசெய்தி கூறுகின்றது.

***

அமெரிக்க வியாபாரிகள், பசு மாடுள் இப்பொழுது அதிகமாய்விட்டபடியால் மாட்டுவிலை இறங்கி வியாபாரம் பாதிக்கப்படும் என்று முடிவுசெய்து, பசு மாடுகளை 100க்கு 10 வீதம் கொன்றுவிடத் தீர்மானித்திருக்கின்றனர்என்று லண்டனில் பிரசுரமாகும் மான்செஸ்டர்கார்டியின் பத்திரிகை கூறுகிறது.

***

'சீனாவுக்கும் ஜப்பானுக்கும் சிறிது மாதங்களாக இருந்துவந்த விரோதம் இப்பொழுது சண்டையாய் மாறிவிட்டது..ஷாங்கையில்இருதிறத்தாருக்கும்கடும் போர் நடக்கின்றது. இம்மாதம் 4-ந்தேதி அன்று ஜப்பானியர் 6 அங்குல பீரங்கி கொண்டு ஷாங்கையைத் தாக்கினார்கள் என்று தெரிகின்றது. பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும், அமெரிக்க அரசாங்கத்தாரும் இருநாட்டாருக்குள் மத்தியஸ்தம் செய்துவிக்க முயன்று வருகின்றார்கள் என்று அயல் நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

1932-வது வருடம் ஜனவரி மாதத்தில் சென்னை எஸ்பிளநேட்டிலுள்ள காங்கிரஸ் கதர் வஸ்திராலயத்தில் 16 ஆயிரம் ரூபாய்க்குக் கதர் துணிகள் விற்கப்பட்டுள்ளனவாம். 1931-வது வருடம் ஜனவரியில் 14 ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு விற்றதாம். இவ் வருடம் ஜனவரியில், கடந்த ஆண்டின் அதே மாதத்தைக் காட்டிலும் 1500 ரூபாய் விலைமதிப்புள்ள கதர் விற்பனையாயிருக்கின்ற தென்று அகில இந்தியக் கதர் சங்கத்தார் அறிவிக்கின்றனர்.

***

இத்தாலிய நாட்டு வாசியான எமலியர் ஸ்கோலா என்னும் மாது தன் கணவனுடன் 34வருடங்களுக்கு முன் லண்டனில் வந்து குடியேறினாராம். அவர்கள் ஒரு சிறு கடையொன்றை வைத்துக்கொண்டு ஜீவனம் செய்துகொண்டிருந்தார்களாம். சமீபத்தில் அவர்களுக்கு அயர்லாந்து குதிரைப் பந்தயத்தில் 92,000 பவுன் கிடைத்ததாம் இந்த அதிர்ஷ்டம் அவர்களைச் சேர்ந்ததும், இங்கிலாந்திலுள்ள நிலக்கரிச் சுரங்கத்தார்களும், மற்ற வியாபார நிலயத்தார்களும் அவர்களிடம்வந்து தங்கள்வியாபார மூலதனத்தில் பங்கு எடுத்துக்கொள்ளும்படி கேட்கின்றனராம். தினம் பலர் தர்மகாரியங்களுக்குப் பொருளுதவி கேட்கின்றனராம். பலஎளிபவர்கள் உதவிகேட்டு எழுதும்கடிதம் தினம் போர்போராய்க் குவிந்து விடுகின்றனவாம். ஒரு பத்திரிகை நிருபரிடம், இந்த அதிர்ஷ்டம் தங்களுக்கு வாராதிருந்தால் நலமாயிருக்கு மென்றும், தங்களைக் காணவருகின்றவர்களுக்கும் வருகின்ற கடிதங்களுக்கும் பதில் கூறுவது தவிர வேறெதற்கும் தமக்குநேரமிலாது போகின்றதென்றும், எங்காவது ஒருவருக்கும் தெரியாதவிடம் போய்விட்டால் நலமாயிருக்குமென்றும் கூறினார்களாம். அவர்கள் இத்தாலியா சென்று விடலாமா, அல்லது இங்கிலாந்திலேயே இருக்கலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறார்களாம்.

---

### மதிப்புரை

**பாகவத விஞவிடை.**

ஆ. சீ. கஸ்தூரிரங்கய்யர் B. A., L. T. அவர்கள் செய்தது.

பிரசுரஞ் செய்தவர்:—வி. ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட்ஸன்ஸ், நம்பர், 292. எஸ்பிளநேட், சென்னை.
(விலை ரூ. 2).

இவ்வுலகின் ஜீவாதாரமான நூல்கள் சில. அவைகளிற் சிறந்தொன்று பாகவதம் என்பதை, அறிவுடையவர்களில் அறியாதார் ஒருவருமில்லை. ஆதலின் அதனை எத்துணை விதங்களில் இயற்றித் தந்தாலும் அத்துணை விதங்களிலும் உலகிற்கு உதவிசெய்ததாகும்

இப்பொழுது ஸ்ரீமான், ஆ. சீ. கஸ்தூரி ரங்கய்யர் அவர்கள், விஞவிடை உருவமாகத் தமிழில் இயற்றிய இந்நூலினை மிகவும் பாராட்டுகின்றோம். இப்பதிப்பு 552 பக்கங்களும், 20 சித்திரப்படங்களுங் கொண்டிருக்கின்றது. இந்நூலினைப் பயில்பவர்களுக்கு உதவியாகும்பொருட்டு விரிவாக வரைந்துள்ள அட்டவணைகள், விடயங்களை ஆராய்பவர்க்கு அதிகமும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. பாகவதக் கருத்தை விளக்கியும், கிருஷ்ண லீலைகளைப்பற்றியும், லீலாசுகர் கதையையும் போன்ற பல முக்கியமான விடயங்களை நன்குஆராய்ந்து தெளிவாக வரைந்திருக்கின்ற 'அனுபந்தம்' இப்பதிப்பின் சிறப்பைப் பலபடி உயர்த்துகின்றது.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறுதீர்




லிமிடெட். ஸோல் ஏஜண்டு: தன்வந்திரி, மதுரை.

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.
கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு டிபோ
பிராஞ்சு: மதுரை. காஞ்சீபுரம்


188954

KALANILAYAM
REG. NO. M, 2324.

—:வைத்திய ரத்ன:—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"




பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதருஸ்.

கேட்லாக் இனும்

## அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேவன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

## 1930-வது வால்யூம்

பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும். சில பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் சீக்கிரத்தில் பெறல் நலம்.

குறுந்தொகை என்னும் சிறந்த சங்கநூல் உரையுடனும், விசேடக் குறிப்புகளுடனும் இவ்விதழ்களில் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன.

| விலை உள்நாடு | | விலை வெளிநாடு |
|---|---|---|
| ,, 9-0-0 | அரைலெதர் பயிண்டு | ,, 10-8-0 |
| ,, 8-8-0 | காலிகோ | ,, 10-0-0 |
| ,, 7-8-0 | (பயிண்டு செய்யாதது) | 9-0-0 |

ரயிலில் அனுப்பப்புத்தகமொன்றிற்கு 6 அணா ஆகும். தபாலில் அனுப்பவேண்டுமானால் உள்நாடுகளுக்கு ரூ. 2, வெளிநாடுகளுக்கு ரூ. 3 விலையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

கலா நிலயம்,
புரசை, சென்னை.

ஏற்படுத்தியது] நாஷனல் [1906

## இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

1906-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது.

ஸ்டாக்குகளிலும், பாண்டுகளிலும் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களில்லாது லைப் இன்ஷூரன்ஸ் நிரந்தர சேமிப்பாக விருக்கின்றது.

பிள்ளையின் கல்விச் சேமிப்பு வயோதிகச் சேமிப்பு பெண்ணின் வரதக்ஷிணை குடும்பச் சேமிப்பு இவற்றிற்கு இன்ஷியூர் செய்யுங்கள்.

குறைந்த விகிதப் பிரிமியங்கள்—தாராள நிபந்தனைகளை இந்தியரால் மட்டும் நிர்வகிக்கப்பட்டுவரும் வலிமை பெற்ற கம்பெனி

மொத்த ஆஸ்தி ... ரூ. 1,72,00,060-க்குமேல்
செலுத்தப்பட்டுள்ள உரிமைகளின் மொத்தம் ,, 86,00,00

திருப்திகரமான வீதப்படி போனஸ் வெளியிடப்படுகின்றது.

ஏஜன்ஸி நிபந்தனைகளுக் கெழுதுவது உங்களுக்கு லாபகரமானது.

T. அனந்தாச்சாரி, B. A. பிராஞ்சு காரியதரிசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ டவுன், மதராஸ்.
R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்

நெருப்பு, இதர விபத்துகள் சம்பந்தமானவற்றை நாஷனல் நெருப்பு & ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டார் கவனித்து வருகின்றனர்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்.,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
டி. அனந்தாச்சாரி, பி. ஏ, பிராஞ்சு காரியதரசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ டவுன், மதராஸ்
ஆர். ஜி. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

— திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துள்ளது மாணக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணா 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

அலங்காரம்—அழகு—ஸ்நானம்
இவைகளுக்கு எங்கள்

:: மணித் தைலம் ::

மிகச் சிறந்தது. ஆயுர்வேத முறைப்படி தயார்செய்யப்பட்டது. 50 வருஷங்களாகப் புகழுடன் உலாவிவருகிறது. தலைமயிரை உதிராமற் தடுத்து நீளமாக வளரச் செய்யும். முகத்திலுண்டாகும் வடுக்களையும் பருக்களையும் நீக்கும். உஷ்ணத்தைச் சமனஞ்செய்யும்.

5 துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1
5 புட்டிகள் விலை ரூ. 4

ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. F. Kumariah, B.A., B.L., (Editor)